812

812
72
N47P0
ஊ211 N47P0
N51·5·1
19791

10,000 மைல்கள்

எங்களிடம் புதுப்பிக்கப்படும் டயர் ஒவ்வொன்றும் 10,000 மைல்கள்வரை உழைக்கின்றன: இந்த உத்தரவாதத்தை நாங்கள் அளிக்கின்றோம்.

புதிய டயர் வாங்குவதைவிட உங்கள் டயரைப் புதுப்பித்துக் கொள்வதால் சரி பாதிப் பணத்தை மிச்சப்படுத்துகிறீர்கள். பஸ், லாரி முதலாளிகட்கு அரிய சந்தர்ப்பம்.

மூர்த்தி டயர் ஒர்க்ஸ்

298, வால்டாக்ஸ் ரோடு

சென்னை 3.

அறிமுகப்படுத்துகிறோம்

○

பிரின்சஸ்

உயர்ந்த கூந்தல் தைலம்

○

கிரிதாஞ்சன்

எல்லாவிதமான வலிகளுக்கும்

நிகரற்ற சஞ்சீவி

○

லெக்ளீன்

மிகச் சிறந்த தந்த சுத்தி;

பற்களை உறுதிப்படுத்தும்

○

புளூ பர்ட்

பவுண்டன் பேனா இங்கி;

எல்லா நிறங்களிலும்

கிடைக்கும்

●

உற்பத்தியாளர்கள் :—

LEONAL PRODUCTS SYNDICATE

Managing Agents: JANJAN (INDIA)

2/178, Thambu Chetty St., Madras-1.

1— .02

அழகான கேசத்திற்கு
பிரஸிடெண்ட்
வெஜிடபிள் ஹேர் ஆயில்
உபயோகிக்கவும்.

RATHOD TRADING CO. SOWCARPET MADRAS. 1

ஞாயிறு

ஆசிரியர்: A. K. வேலன்

மாத மிருமுறை

விலை 0-2-0

விற்பனையாளர் தேவை

மார்ச்சு முதல்
வெளிவருகிறது

●

ஞாயிறு நிலையம்
கரந்தை—தஞ்சை.

மூட்டைப் பூச்சி ஒழிப்பு

பக்ஸ்லே

மூட்டைப்பூச்சி மருந்து

வெளியூர் ஏஜண்டுகள் தேவை

COMRADE AGENCIES
59, (Upstairs) MANNADY-MADRAS

18 ct. Rolled Gold
7½ Curvex
15 Jewels
Superior



Quality White Arabic Dial
Rs. 85.

GUARANTEED 10 YEARS

For Ladies 18 CT. ROLLED GOLD 5 TANNOETU
15 Jewels Superior Quality White Arabic Dial Rs. 75/- Guaranteed 10 years.

Our Special Catalogue on request. West End & Favre Leuba Watches also available.

RIZVON & BROS., 177, DEVARAJA MUDALI ST., :: MADRAS - 1.

மக்கள் என்ன கூறுகிருர்கள்?

மாதவிடாய்

(தேவி பில்ஸ்)

(Patent Regd. No. CDL/688)

ஆயிரக்கணக்கில் வந்துள்ள
கடிதங்களில் சிலவை.

ஆச்சரியம்

ஐயா, Kuala Lumpur (Malaya)

தங்கள் 'தேவிபில்ஸ்' நான் எதிர் பார்த்ததற்குமேல் அருமையான பலனை அளித்துள்ளது. இங்கிலீஷ் மருந்துகளாலும் இஞ்செக்ஷன்களாலும் தீர்க்க முடியாத நின்றுபோன மாதவிடாயை அதிசுலபத்தில் ஆச்சரியப்படும் வகையில் வெளியாக்கியிருக்கிறது.

(Sd) D. Kannappan

அற்புதச் சஞ்சீவி

ஐயா, Polgahawela Ceylon

தங்களுடைய 'தேவிபில்ஸ்' வரவழைத்து என்னிடம் சிகிச்சை பெறும் நோயாளிக்குக் கொடுத்தேன். அற்புதமான பலனளித்துள்ளன வென்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(Sd) C. Joseph

மாதவிடாய்

தேவிபில்ஸ் (Reged. CDL/688.) எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுவிட்ட மாதவிடாய் உடனே வெளியாக்கும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள். உத்தரவாதமுள்ளது. விலை சாதா ரூ. 8-8-0. ஸ்பெஷல் ரூ. 10-8-0. (த. சி. தனி.)

கர்ப்பத்தடை

ஸ்பெக் மாத்திரைகள் (Regd.) No. 266) 12 நாள் உபயோகித்தால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவை தடுக்கும் மாதவிடாய் தவறுது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். டெம்பரரியாக கர்ப்பத்தடைக்கு ஸ்பெக் ஜெல்லியை உபயோகிக்கவும் — ஸ்பெக் டாப்ஸ் — ரூ. 12-0-0. ஜெல்லி ரூ. 6:8-0.

(த. சி. தனி)

SEENU & CO.
P. B. No. 1638 (7) MADRAS-1
Branch: 138, Serangoon Road, SINGAPORE
Agents: NEW COLOMBO MEDICAL STORES,
82, Main Street, COLOMBO-11

NOTE

Our Product **DEVI PILLS** has been duly analysed by the Director Central Drugs Laboratory of India under Patent Regd. No. CDL/688.

திருப்தி

Kelang Lama Kullim S. Kedah

ஐயா,

தங்கள் 'தேவிபில்ஸ ஒரு புட்டி அருந்திய மாத்திரத்தில் நல்ல பலனளித்ததைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(Sd)Narayanan

சுகம் கொடுத்தது

ஐயா. Ratinapura, Ceylon.

என் மனைவிக்குச் சுமார் ஐந்து வருடங்களாக மாதவிலக்காகாது நின்றுவிட்டிருந்தது. தேவிபில்ஸ வரவழைத்து உபயோகித்ததில் கடந்த ஐந்து வருடங்களாகத் தடைப்பட்டிருந்த 'மாதவிடாய் தற்போது சுகமாய்விட்டது.

(Sd) S. Vellasamy

நல்ல பலன்

ஐயா, Prai, Malaya.

தங்கள் 'தேவிபில்ஸ்' அருந்திய இரண்டு வாரங்களில் நல்ல பலனடைந்தேன்.

(Sd) Mrs. J. A. Aboo

ஒப்பற்ற மருந்து

ஐயா, Singapore.

கர்ப்பத் தடைக்கு அற்புதமான மருந்து ஸ்பெக் மாத்திரைகள்தான் என்று நற்சாட்சியளிக்க நான் மிகவும் மகிழ்கிறேன். வாழ்க்கைச் சுகத்தைப் பாதிக்காமல் கர்ப்பத்தடை செய்வதில் தங்கள் மருந்து ஆச்சரியகரமான பலனை அளிக்கிறது.

(Sd.) M Kutten Pillai.

நல்ல குணம்

ஐயா, Pandaravalai.

தங்களிடமிருந்து வாங்கிய 'ஸ்பெக் பில்ஸ்' நான் விரும்பிய குணத்தைக் கொடுத்திருப்பதை மிக மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்கிறேன்.

(Sd) R. A. Sivan

பெருமை பெற்றது

ஐயா, Kepalabatas, Malaya.

தாங்கள் அனுப்பிய ஸ்பெக்'பில்ஸை உபயோகித்ததில் நல்ல பலனடைந்தேன். இங்குள்ள என் நண்பர்களுக்கு அதன் பெருமையைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

(Sd) M. Palaniyandi

சென்னை நண்பர்கள்

சென்னை நண்பர்களின் வசதிக்காக எங்கள் அலுவலகத்தில் "புத்தக விற்பனைப் பிரிவு" ஒன்று தொடங்கி யிருக்கிறோம்.

★

தமிழ்ப் புத்தகங்கள் அனைத்தும் எங்களிடம் கிடைக்கும்.

★

அலுவல் நேரம்:
காலை 9 மணி முதல்
மாலை 6 மணிவரை

★

"பொன்னி" அலுவலகம்
16, சேணி அம்மன் கோவில் தெரு,
(போலீஸ் ஸ்டேஷனுக்குப் பின்புறம்)
தண்டையார்ப்பேட்டை
சென்னை.

திண்டுக்கல்லிலே!

மேட்டுப்பட்டி எனாமல் பாக்டரி செல்லும் வழியில் உள்ள எமது நிலத்தை விற்பனை செய்கிறோம். மில் கட்ட, தொழிற்சாலை கட்ட, தோட்டம் போட, பங்களாக்கட்ட, கேணியுடன் கூடிய நல்ல வசதியுள்ள இடம். நேரிலோ, தபால் மூலமாகவோ தெரிந்து கொள்ளவும்.

விபரத்திற்கு:

K. குருசாமி
பேகம்பூர் — திண்டுக்கல்

'கார்க்கி யின் அற்புத நாவல்

தமிழாக்கம்:
டி. என். ராமச்சந்திரன்

அவள் அழகி. நாட்டின் கீர்த்தி பெற்ற நடிகை ராணி. அலைபாயும் கூந்தலும் ஆளை மயக்கும் விழிச்சுடரும் இளைஞர் உலகை ஆட்டி அலைக்கழித்தன.

அவளுடைய மோகன அழகில் மதிமயங்கிய இரு சகோதரர்களின் போக்கு எப்படி மாறியது? என்ன ஆனது? என்பதைப் படித்துத் தான் பார்க்கவேண்டும்.

விலை ரூபாய் ஒன்று

இமயப் பதிப்பகம்
நாகப்பட்டினம்

பொன்னி

பொருளடக்கம்

மலர் 5	பிப்ரவரி 10, 1951	இதழ் 1

திருவள்ளுவர் ஆண்டு 1982 தைத்திங்கள் 28-ம் நாள்

சமூகம் ஒரு குழந்தை ...	நேரு ...	5
கப்பல் வராதா ? ...	கார்ட்டூன் ...	6
நெசவாளர் தொல்லை ...	தலையங்கம் ...	7
காலமும் கருத்தும் ...	...	9
வெறும் கலாட்டா ...	கில்லாடி ...	12
தெளிவு ...	ஜெகசிற்பியன் ...	15
தோழி இல்லை ...	சி. திருநாவுக்கரசு ...	17
தகப்பனும் மகளும் ...	கு. அழகிரிசாமி ...	18
பொது மேடை ...	கடிதங்கள் ...	33
பாலனும் யானையும் ...	கலைமணி ...	36
தமிழ் விருந்து ...	மு. அண்ணாமலை ...	38
டாக்டர் டம்பாச்சாரி ...	இளமைப்பித்தன் ...	42
வானம்பாடி ...	ரா. தணலன் ...	51
சொத்துரிமை ...	ஆறு ...	56
பொழுது போக்கு ...	விமரிசனம் ...	60
வளரும் இலக்கியம் ...	...	63

சமூகம் ஒரு குழந்தை

சமூகம் ஒரு குழந்தை மாதிரி. குழந்தை வளர்ந்து பெரியவனான பின் குழந்தைப் பருவத்துச் சட்டையையே அவனுக்கு அணிவிக்க முயன்றால் அந்தச் சட்டை கிழிந்துவிடும். அதுபோல் சமூகமும் காலத்திற்கு ஏற்ப வளர்ந்து புதிய பழக்க வழக்கங்களை ஏற்றுக்கொள்கிறது. இதை அனுமதிக்க மறுத்தால் புரட்சி வந்து சமூகத்தை மாற்றியே தீரும். உலகம் மாறிக்கொண் டிருப்பதால் எந்தத் தேசமும் மாறாமல் ஒதுங்கிநிற்கமுடியாது.

சீனாவில் நடந்திருப்பது அதுதான். சமூகத்தை மாற்ற வேண்டும் என முயன்ற மக்களை அடக்குவதற்குச் சிந்தனையற்ற சீன ஆட்சியாளர்கள் முயன்றனர். அவர்களைப்புரட்சி கவிழ்த்துவிட்டது. காலமாறுதலை உணராமல் அடம் பிடிப்பவர்களுக்கெல்லாம் இதே கதிதான் ஏற்படும். மாறுதலை எதிர்க்கும் சமூக அமைப்பை, மக்கள்ஒழித்துச், சரித்திரமென்ற குப்பைத் தொட்டியில் எறிந்துவிடுவர்.

[1951 ஜனவரி 31-ம் நாள் ஆமதாபாத்தில் மாதர் கூட்டத்தில் பேசும்போது **ஜவஹர்லால் நேரு** இவ்வாறு குறிப்பிட்டார்]



அமெரிக்கா, ரஷ்யா, சீன முதலிய எல்லா நாடுகளிலிருந்தும் உணவுப் பொருளை வரவழைக்க இந்திய சர்க்கார் முயற்சிக்கிருர்கள்–செய்தி

சென்னை-600 008
16779

நெசவாளர் தொல்லை

எத்துறையிலும் துயரம்; எவர்பாலும் துயரம்! துயரம் முழுஆட்சி செலுத்தும் நாட்களில் நாம் வாழ்கிறோம். நாட்டில் வயிறு நிறைய உண்ண உணவு இல்லை; படித்தவர்கட்கும் மற்றவர்களுக்கும் வேலை இல்லை; வசிப்பதற்குத் தக்க வீடுகள் இல்லை; உடுத்தப் போதுமான உடை இல்லை. இந்த 'இல்லை'ப் பாட்டு நெசவாளர் முன்னிலையிலும் 'நூல்இல்லை' என்ற தன் கோர 'நர்த்தனத்தை' ஆடத் தொடங்கிவிட்டது. 'நூல் இல்லை: ஆதலால் 'வேலை இல்லை'. 'வேலை இல்லை' ஆதலால் கையில் 'காசு இல்லை.' 'காசு இல்லை' எனவே பட்டினித் தொல்லை என்று தமிழக நெசவாளர் அத்தனைபேரும் ஆறாத் துயரால் கண்ணீர் வடிக்கின்றனர். இந்த அவலநிலை நாளும் நாளும் 'வளர்ந்தோங்கி' வருகிறது.

தமிழகத்தின் பண்டைய தொழில் நெசவுத் தொழில். மிக உயர்ந்த தொழில் என்று இலக்கியங்களில் பாராட்டுப் பெறுகிறது. அந்தத் தொழிலிலிருப்பார் பிறர் தயவை எதிர்பார்க்க வேண்டியதில்லை என்பது வழங்கிவரும் கருத்து. வேளாண்மைக்கு அடுத்தபடியாக மேலானதெனக் கருதப்படும் இத்தொழிலில் ஈடுபட்டிருப்போருக்குத்தான் இன்று தொல்லை வந்திருக்கிறது.

காரணம் என்ன? 'அவர்கள் வாழ்வு நடத்தத் தறி ஓட வேண்டும்; தறி ஓட ஓட அவர்கள் வாழ்வு செம்மை பெறுகிறது என்று பொருள். இப்போது அவர்கட்குப் போதுமான நூலை அரசாங்கம் வழங்கவில்லை. இந்திய சர்க்காரின் உள்நாட்டு அமைச்சர் ஆச்சாரியார் கூறுவதைக் கேளுங்கள்: "மாதத்தில் ஆறுநாளைக்கு வேண்டிய நூல்தான் தென்னிந்திய நெசவாளிக்கு வழங்கப்படுகிறது; மீதி நாட்களில் அவன் வேலையின்றித் தவிக்கிறான். இது மிகவும் மோசமான நிலைமை.

"தாயாரிடமிருந்து குழந்தையைத் தூக்கிச் சென்றுவிட்டு. எப்பொழுதாவது சில சமயங்களில் அந்தக் குழந்தையை அத்தாயிடம் காட்டிவிட்டு மீண்டும் தூக்கிச் சென்று விடுவதாக இருப்பின் அத்தாயின் நிலைமை எப்படி இருக்குமோ அதேபோல்தான் தற்சமயம் தென்னிந்தியாவிலுள்ள நெசவாளர்களின் நிலைமை இருக்கிறது"

இந்திய சர்க்காரில் பிரதமருக்கு அடுத்த நிலையிலுள்ள சி. ஆர். கூறுவது இது. இந்த அவலநிலை ஏன் நீடிக்க வேண்டும்?

போதுமான நூல் நாட்டில் இல்லையா? இருக்கிறது. நம் மாகாணத்திலேயே மாதம் ஒன்றுக்கு 40,000 பேல் நூல்

உற்பத்தியாகிறது. இதில் 12,000 பேல்தான் கைத்தறி நெசவாளர்களுக்குத் தரப்படுகிறது. மற்றவை வெளிநாடுகட்கும் வெளி மாகாணங்கட்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு ஏற்றுமதி செய்துவிடுவதால்தான் கைத்தறிகட்குப் போதுமான நூல் இல்லாதபடி துயரம் பெருகியிருக்கிறது.

துயரத்திற்குக் காரணம் நமக்குப் புரிகிறது. துயர் துடைக்க வேண்டுமானால் நூல் ஏற்றுமதியை நிறுத்த வேண்டுமென்ற முடிவுக்கு நாம் வருகிறோம். ஆனால் ஏற்றுமதியை நிறுத்த முடியவில்லை. காரணம் சென்னை அரசினருக்கு நூல் உற்பத்தி, வினியோகம் இவற்றைப் பொறுத்தவரையில் யாதொரு அதிகாரமும் இல்லை. டில்லி சர்க்காரின் அதிகார வரம்புக்குட்பட்டு, நூல் உற்பத்தி, வினியோகம் முதலியன நடைபெறுகின்றன. டில்லியிலிருப்பவர்களோ, தென்னாட்டு நெசவாளர்களின் துயரத்தைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை. புரிந்து கொண்டாலும் தீர்க்க எண்ணவில்லை. சென்னை அரசினரோ, மடியிலிருந்தும் எடுத்துத் தன் குழந்தைகளுக்கு ஊட்ட முடியாத நிலையில் நின்று தவிக்கின்றனர்.

இதன் பயனாகச் சேலம், மதுரை, காஞ்சி, அருப்புக்கோட்டை முதலிய இடங்களிலெல்லாம் நெசவாளரின் பட்டினி ஊர்வலங்கள், மறியல்கள், கண்டனக் கூட்டங்கள் நடைபெற்ற வண்ணமிருக்கின்றன. அரசாங்கம் அடக்குமுறை கொண்டு மறிக்கிறது, சில சமயம். மற்றொரு சமயம் நூல் தருவதாக ஆசை வார்த்தை காட்டுகிறது. இந்த வேடிக்கைக் கிடையே நெசவுத் தொழிலாளர் குடும்பங்களைப்பற்றி வரும் பரிதாபமான செய்திகள் நம்மைத் திகைக்க வைக்கின்றன.

வேலை செய்யாததால் பட்டினி கிடக்க நேரிட்டு, நெசவாளர் குடும்பங்கள் ஊரூராக அலைகின்றன. பிச்சை எடுத்துத் திரிகின்ற மக்கள் எத்தனையோ பேர்! மானமாக வாழ முடியாத நிலையில் உயிரை மாய்த்துக் கொண்டார் என்றுகூடச் செய்திகள் வருகின்றன. அருமை மனைவியை, ஆசைக் குழந்தையை விட்டுத் 'தேசாந்தரம்' புறப்பட்டுச் சென்றோர் எத்தனையோபேர்!

இந்நிலை மிகப் பொல்லாதது. அரசினர் உடனே கவனிக்க வேண்டும். வெள்ளத்தால் மக்கள் மாளலாம்; நில நடுக்கம் மக்களைப் பலி கொள்ளலாம்; போர்வெறி மக்கட் கடலைத் தன்னுள் புதைத்துக் கொள்ளலாம். இத்தகைய சாவுகளை உலகம் வரவேற்கிறது. ஆனால் வேலை செய்யக் காத்திருக்கும் ஒருவனுக்கு வேலை இல்லை; அதனால் அவனுக்கு வருவாய் இல்லை; வருவாய் இல்லாமல் அவன் பட்டினிகிடந்து மாண்டான் என்பது நல்ல நாட்டில் நடக்கக் கூடாத நிகழ்ச்சி.

ஆளும் நல்லவர்கள் இதனை உணர்ந்து, கைத்தறி நெசவாளர்கட்குப் போதுமான நூல் கிடைக்க உடனே ஆவன செய்யுமாறு நாட்டு மக்களின் சார்பில் வேண்டுகிறோம்.

காலமும் கருத்தும்

ஐந்தாம் ஆண்டு

'பொன்னி' நல்லாளுக்கு இன்று ஐந்தாம் ஆண்டு தொடங்குகிறது. நான்கு ஆண்டு நல்வாழ்வை முடித்துப் 'பொன்னி' இன்று புதிய ஆண்டின் தலைவாயிலில் நிற்கிறாள். பல புதிய பகுதிகள் 'பொன்னி' நண்பர்களுக்கு இந்த ஆண்டில் வழங்கப்பட விருக்கின்றன. சிறந்த மொழிபெயர்ப்புக் கதைகள் தொடர்ந்து வெளியிடப் பெறும். இந்த இதழில் வந்துள்ள 'சொத்துரிமை' மாபசானின் அரிய சிறு கதை. 'வானம் பாடி'யின் கடைசிப் பகுதி வெளியாகி யிருக்கிறது. புதிய தொடர் கதையை நண்பர்களுக்கு விரைவிலேயே வழங்க விருக்கிறோம். 'பொழுது போக்கு' சினிமாப் பகுதியாக மட்டுமின்றி, நாடகம், ரேடியோ, விளையாட்டு முதலிய அனைத்தையும் உள்ளடக்கிய பகுதியாக இனி மிளிரும். 'தகப்பனும் மகளும்', 'டாக்டர் டம்பாச்சாரி' ஆகிய சிறுகதைகளை நண்பர்கள் கு. அழகிரிசாமி, இளமைப்பித்தன் ஆகியோர் எழுதி யிருக்கின்றனர். 'தமிழ் விருந்து' தோழர் மு. அண்ணாமலை, நண்பர்களுக்குத் தொடர்ந்து வழங்கவிருக்கும் இலக்கிய விருந்தாகும். 'வெறும் கலாட்டா' கிண்டல் சித்திரம். மற்ற சுவையான பகுதிகள் அடுத்தடுத்த இதழ்களில் இடம் பெறும். தமிழ் மக்களின் அன்பையும் ஆதரவையும் நிலையாகப் பெற்றுள்ள 'பொன்னி' நல்லாள், புத்தாண்டுத் தொடக்க வாழ்த்துதலையும் அனைவரிடமிருந்தும் எதிர்பார்க்கிறாள்.

இந்து சட்டத் தொகுப்பு

இந்து சட்டத் தொகுப்பு மசோதா எப்பொழுதோ நிறைவேறியிருக்க வேண்டிய ஒன்று. அவ்வாறின்றிக் காலங்கடத்தப்பட்டு வருவதொன்றே, பழமை விரும்பிகட்கு ஆட்சியில் எவ்வளவு பிடியிருக்கிற தென்பதைக் காட்டப் போதுமானதாகும். முதலமைச்சர் நேரு இம் மசோதா நிறைவேற வேண்டுமென்பதில் மிகவும் உறுதியாயிருக்கிறார். அவரைத் தலைவராகக் கொண்ட காங்கிரஸ் கட்சி தான் நாட்டை ஆளுகிறது. பார்லிமெண்டில் அதுதான் பெரும்பான்மைக் கட்சி. அப்படி யிருந்தும் இம்மசோதா ஒத்திப் போடப்படுவதும், மறுபடியும் பரிசீலனை செய்யப்படுவதும், பின்னர் அடுத்த கூட்டத்திற்குத் தள்ளி வைப்பதும் விநோதங்களே. காரணம் காங்கிரஸ்காரர்களிலேயே பலர் இம்மசோதாவை எதிர்ப்பதுதான். இப்பொழுது நடைபெறும் பார்லிமெண்டுக் கூட்டத்தில் இம்மசோதாவை நிறைவேற்றி விடுவதென்று டாக்டர் அம்பேத்கார் உறுதியாயிருக்கிறார். ஆமதாபாத் மாதர் கூட்டத்தில் நேரு

கூறிய எச்சரிக்கையைப் பார்லி மெண்டு உறுப்பினர் மனதிற் கொண்டு, மசோதாவைத் தாமத மின்றி நிறைவேற்றுவரெனநப்பு கிறோம்.

உலக நிலை

சீனாவை 'ஆக்ரமிப்பாளன்' என்று ஐ. நா தீர்மானித்து விட்டது. இந்தியாவும் மற்ற ஆசிய நாடுகளும் எவ்வளவோ முயன் றும் யு. எஸ். தீர்மானத்தைத் தடுக்க முடியவில்லை. யு. எஸ். தீர்மானப்படி சமரசக் கமிட்டி ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. அக்கமிட்டியில் இந்தியா பங்கு கொள்ள மறுத்து விட்டது. சீனு வின் முதலமைச்சர் அக் கமிட் டியை அலட்சியம் செய்யப் போவதாகக்குறிப்பிட்டுவிட்டார். இந்நிலையில் நான்கு வல்லரசுகள் சந்திப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. உலகப் போரைத் தவிர வேறு வழியற்ற நிலைக்கே வல்லரசுகள் உலகத்தை இழுத்துச் சென்றும், சமாதா னத்தின் பாலுள்ள ஆர்வமே எங் கணும் தலை தூக்கி நிற்கிறது. உலக மக்கள் போர் பரவுவதை விரும்பவில்லை. எனவே தான் போர் வெறியர்களின் முயற்சி கள் உடனே பலனளிக்காமல் தாமதப்படுத்தப்பட்டு வருகின் றன. அமெரிக்காவையும் ரஷ்யா வையும் தவிர வேறு எந்த நாடும் போரில் ஈடுபடத்தயாராகஇல்லை. பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகள் வேறு வழியின்றி அமெரிக்காவின் போக்குக்கு ஒத் துத் தாளம் போடுகின்றன. இத் தகைய 'போலி' ஒத்துழைப்பை நம்பி அமெரிக்கா ஆர்ப்பாட்டம் செய்வது ஏனோ என்று புரிய வில்லை. கொரியாவில் நேச நாடு கள் செய்து வரும் 'உதவி'யை அமெரிக்கா தெரிந்து கொண்டு தானிருக்கிறது. அப்படியிருந் தும்அமெரிக்கா, போரைவிரும்பு கிற தென்றால், அந்நாட்டிலுள்ள 'பேராசைக் காரர்கள்' தாம் கார ணமாக இருக்கவேண்டும். போர் வந்தால் ஏராளமான பணத்தைக் குவிக்கலாமென்று கனவு காணும் அவர்கள் போர் வருவதற்கான சூழ்நிலையை உண்டாக்குவதி லேயே ஆர்வங்காட்டுவதில் ஆச் சரியமில்லை. இத்தகைய சிலரின் நலனுக்காக உலகம் போர்ப் படு குழியில் தள்ளப்பட வேண் டுமா? அமெரிக்காவிலுள்ள பொது மக்கள் சிந்தித்துப் பார்த்துத் தீர்ப்பளிக்க வேண் டிய செய்தியாகும் இது.

உரிமை மறுப்பு

நமக்குக் குடியரசாட்சி வந்து ஒரு ஆண்டு முடிந்திருக்கிறது. சென்ற ஜனவரி 26-ல் நடை பெற்ற கொண்டாட்டங்கள் நமக்கு இதை நினைவுறுத்தின. அதே போன்று மக்களுக்குப் புதிய அரசியல் வழங்கியிருக்கும் உரிமைகளையும் நம் கண்முன் வைத்தன. அரசினர், கொண் டாட்டத்தை மட்டும் கருதினரே யன்றி, உரிமைகளை மறந்தனர். இல்லாவிட்டால், டில்லி அமைச் சர்கள் வரும்போது தங்கள் வெறுப்பைக்காட்ட, மக்கள் கறுப்புக் கொடி காட்டும் உரி மையை மறுப்பார்களா? மந்திரி வரும் திசையிலேயே யாரும் வரா மல் தடுப்பதும், கறுப்புக்கொடி காட்டும் தொண்டர்களைத் தடி

கொண்டு தாக்குவதும், கைது செய்வதும் போன்ற அடக்கு முறைகளில் ஈடுபடுவார்களா? மக்கள் தங்கள் வெறுப்பை அமைதியான முறையில் காட்ட முன்வரும்போது, அந்த உரிமையை மக்கள் அரசாங்கம் வழங்க மறுப்பது மிகக் கொடுமையேயாகும். அமைச்சர்கள் அரசியல் சட்டத்தை முதலாண்டு முடிவதற்குள்ளேயே மறந்து விட்டனர் என்பதைத்தான் இத்தகைய அடக்குமுறைகள் காட்டுகின்றன.

குடி மதிப்பு

இந்தியா முற்றும் இம்மாதம் குடி மதிப்புக் கணக்கு எடுக்கப் படுகிறது. பிப்ரவரி 9-ம் நாள் இவ்வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. ஒரு நாட்டின் எதிர்கால வளப்பத்திற்குக் குடி மதிப்புக் கணக்கு மிக இன்றியமையாததாகும். எனவே மக்கள், குடி மதிப்பு எடுக்கவரும் அதிகாரிகட்கு அவர்கள் விரும்பும் செய்திகளை ஒளிவு மறைவின்றித் தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவித்தால்தான் சரியான தகவல்களின் அடிப்படையில் குடி மதிப்பு அமையும். ஒருவர் சரியான தகவல் தராவிட்டால் கூட, பொதுக் கணக்கு குறைபாடுடையது என்றுதான் பொருள். எனவே மக்கள் குடி மதிப்பு வெற்றியடையும் வகையில் பொறுப்புணர்ந்து நடந்து கொள்ள வேண்டுமென விருப்புகிறோம். இம் மதிப்பை அடிப்படையாகக் கொண்டுதான் எதிர்காலத் திட்டங்களெல்லாம் வகுக்கப்பெற விருக்கின்றன என்பதை மக்கள் நினைவிற் கொண்டால் அவர்கள் தங்கள் கடமையைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியும்.

தமிழ்

கரும்புதந்த தீஞ்சாறே!
கனிதந்த நறுஞ்சுளையே!
கவின்செய் முல்லை
அரும்புதந்த வெண்ணகையே!
அணிதந்த செந்தமிழே!
அன்பே...........!

—பாரதிதாசன்

ஒன்பது அவுன்ஸ்

ஆறு அவுன்ஸ் அரிசி, ஆறு அவுன்ஸ் மற்ற தானியங்கள் என்றிருந்து வந்த பங்கீடு ஏழு அவுன்ஸ் அரிசி, இரண்டு அவுன்ஸ் மற்ற தானியங்கள் என்று குறைக்கப்பட்டு விட்டது. வரப்போகும் பஞ்ச நிலைமையைச் சமாளிக்கச் சென்னை அரசினர் மத்திய சர்க்காரை 10 லட்சம் டன் உணவுப் பொருள் கேட்டனர்; டில்லி உணவு அமைச்சரோ, '4 லட்சம் டன் கிடைப்பதே உங்கள் அதிர்ஷ்டம்' என்று கூறி விட்டார். இந்நிலையில் சென்னை அரசினர் எவ்வாறு சென்னை மாகாண மக்களைக் காப்பாற்றப் போகின்றனர் என்பது புரியவில்லை. சென்னை சட்ட சபையில் உணவுப் பிரச்னை பற்றிக் காரசாரமான விவாதங்கள் நடந்திருக்கின்றன. அமைச்சர் எப்படியும் நிலைமை சீர்திருந்தி விடும் என்று உறுதிமொழி கூறியிருக்கிறார். உறுதிமொழி நிறைவேறுவதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

வெறும் கலாட்டா

‘கைக்குத்தல் அரிசியையே சாப்பிடுங்கள்; அதுதான் உடம்பிற்கு உத்திரவாதம்.'' என்று சில காலத்திற்கு முன்பு மந்திரிகளும் தேர்தல் ஊழியர்களும் ஒரே ஸ்தாயியில் ஊளையிட்டார்கள்; ஆனால் ஒருவராவது இதற்குக் காதும் கொடுக்கவில்லை; கையும் கொடுக்கவில்லை. ஏன் தெரியுமா? கேளுங்கள் :—

1. இந்தத் திட்டம் கருவில் இருக்கும் போதே ரேஷன் பிறந்து விட்டது.

2. ரேஷனிலும் பெரும்பாலும் அரிசி போடவில்லை. ‘உணவு தான்யக் கலப்பற்ற' கல்லும் மண்ணும் தான் அதிகம் போட்டார்கள்.

3. பிறகு ரேஷனுக்கும் கொஞ்சம் கொஞ்சமாகக் ‘காய்ச்சல்' அடிக்க ஆரம்பித்தது.

4. இதன் காரணமாக ரேஷன் மெலியவே, ஜனங்களும் மெலிய ஆரம்பித்தார்கள். இதனால் கைக்குத்தலைப் பற்றிப் பேசுவதற்கே அவர்களுக்குத் திராணியில்லாமற் போய்விட்டது.

5. பிறகு ‘ஆறவுன்ஸ் யுகம்' வந்தது; ரேஷனிலும் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டது; முன்பாவது ரேஷனில் கல்லையும் மண்ணையும் கலந்து அரிசி என்றாவது கொண்டு போகும் பையை நிரப்பி வைத்தார்கள்; ஆறவுன்ஸ் யுகத்திலோ ரேஷனில் அரிசியே போடவில்லை!

பிறகென்ன? சட்டியில்லாமல் ரொட்டி ஏது? ‘சைக்குத்தல் அரிசி'யை அப்படியே மென்று விட்டார்கள்!

○

“ரேஷனில் அரிசியைப் போடாமல் இப்பொழுது எதைப் போடுகிறார்கள்?''

‘‘களிமண்ணைப் போடுகிறார்கள்''

இப்படி இரண்டு உருவங்கள் பேசிக் கொண்டு சென்றன. நான் திடுக்கிட்டு நின்றேன். போன மாதம் சென்னையில் இந்திய சர்க்காரின் உணவு இலாகா உதவி மந்திரி திருமல்ராவ் பேசிய பேச்சுக்கள் என் நினைவில் நாட்டியமாடின. அவர் பேசியதற்கும் அந்த அப்பாவிகள் சொன்னதற்கும் எத்தனை ஒற்றுமை! அவர் சொன்னார் :—‘‘இனிமேல் அரிசி வரும், கோதுமை வரும், அது வரும்; இது வரும்; என்றெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் நிச்சயம் ஏமாந்துதான் போவீர்கள். பேசாமல் இனிமேல் பழங்களையும், **உணவு தான்யக் கலப்பற்ற** பலகாரங்களையும் உபயோகிக்கப் பழகிக் கொள்ளுங்கள். டில்லியில் நடந்த கண் காட்சியில் கூட அகில இந்திய மாதர் கவுன்சில் ‘உணவுதான்யக் கலப்பில்லாத' பலகாரங்கள் தயாரித்து வைத்திருந்தார்கள்''

ஒரு வேளை மந்திரி குறிப்பிடும் ‘உணவு தான்யக் கலப்பில்லாத' பண்டம் ரேஷனில் போடப்படும் களிமண்ணாக இருக்குமோ? ஆமாம், களிமண்ணில் எந்த

உணவு தான்யம் கலந்திருக்கிறது?

○

அரிசிப் பற்றுக்குறை ஏற்பட்ட போது கோதுமையை இங்கே அறிமுகம் செய்து வைத்தார்களல்லவா? அப்போது சர்க்காரின் கோதுமைப் பிரச்சாரம் வெகு தீவிரமாக இருந்தது. நளபாக, வீமபாகச் சமையல்காரர்களுக்கெல்லாம் சர்க்காரில் உத்தியோகம் கிடைத்தது; கோதுமைப் பலகாரங்களை எப்படித் தயார் செய்வது என்று ஊர் ஊராகச் சென்று 'கிளாஸ்' நடத்தினர்கள்; கண் காட்சிகள் வைத்துக் கோதுமை இட்டலி, கோதுமை ரஸகுல்லாக்களைச் செய்து காட்டினர்கள். அதன் பயனைக் கோதுமை நம்மோடு தசையும் எலும்புமாக இரண்டறக் கலந்து விட்டது. இன்று கோதுமைக்கும் 'அரிசிக்கதி' ஏற்படவே, மந்திரிகள் 'உணவுதான்யக் கலப்பற்ற' பலகாரங்களை எண்ணிக் கொண்டு நாக்கை நனைக்கிறார்கள். டில்லிக் கண் காட்சியில் 4 அணுவுக்கு உணவுதான்யக் கலப்பில்லாத 4 விதப் பலகாரங்களும் ஒரு பாயஸமும் ஒரு பெண்மணி செய்து கொடுத்தாராம்! நல்ல வேளை, இந்தப் பலகாரங்களை வாங்கியவர் சும்பா வேடிக்கைக்காகத்தான் வாங்கியிருக்கிறார்; அவற்றைச் சாப்பிடவில்லை!

○

ஒரு கவிதை

[இது என் கவிதையல்ல; 'பொன்னி'யில்வெளியிடவேண்டுமென்று ஒருவர் அனுப்பி வைத்தார். நீங்கள் இதை ரசிக்காவிட்டாலும் எழுதியவராவது ரசிக்கட்டுமே!]

குடியரசு நாளுவந்து
முடிஞ்சி போச்சு
குமரிமுதல் இமயம் வரை
கொண்டாட் டங்கள்
விடியும்வரை விளக்குவைத்து
நடத்தினர்கள்
விதவிதமாய்ப் பேசினர்கள்
பெரிய பேச்சு!
படியரிசி பிடியரிசி
யாய்க்குறைந்து
பாதி மண்ணு பாதிகல்லு
என்பதைத்தான்
முடிவினிலே இலையில்விழக்
கண்டோம்; ஓட்டுப்
போட்டபலன் இதுவாகும்
நாட்டி லுள்ளீர்.

[இதற்குப் பதவுரை, கருத்துரை, பொழிப்புரை எல்லாம் தேவையே இல்லை. இலக்கிய ரசிகமணிகள் வேண்டுமானல் இந்தப்பாட்டில் கவிதை யில்லை, பாவம் இல்லை, அது இல்லை, இது இல்லை என்று கூறிக்கொள்ளலாம்; ஆனல் அரிசியில்லை என்று மட்டும் கூறமாட்டார்கள் என்று நம்புகிறேன்.]

பின்வந்த செய்திகள்

1. பங்கீட்டுக் கடைகளில் அரிசியை இனி நிறுத்துத் தான் போடுவார்களாம்!

2. அரிசி ரேஷனை 4 அவுன்ஸ் ஆக்கலாமா என்று மந்திரிகள் யோசித்து வருகிறார்களாம்.

3. 50 லட்சம் டன் அரிசியைப் பண்டமாற்றாகப் பாகிஸ்தான்

"என்னங்க இது! குடி அரசு வந்து வருஷம் ரெண்டாகப் போவுது, இன்னும் விமோசனம் பொறக்கல்லியே......என்ன குடி அரசுங்க இது......?"

"ஏன், எந்த விமோசனத்தைச் சொல்றீங்க ?"

"அதாங்க......கள்ளுக் கடையை இன்னும் தொறக்காமே வைச்சிருக்காங்களே......உம், ஊரை ஏமாத்தற குடி அரசு போலிருக்கு !"

இந்தியாவுக்குத் தர இசைகிறதாம் !

4. 50 லட்சம் டன் கோதுமையைக் கொள்முதல் செய்ய இந்திய நிபுணர்கள் வெளி நாடுகளில் சுற்றுகிறார்களாம்.

5. தென்னிந்தியாவின் உணவுக் கஷ்டத்தைத் தீர்க்கவேண்டுமென்றால் மகாவிஷ்ணு போல யாராவது மச்சாவதாரம் எடுத்தால் தான் முடியும் என்று ஸ்ரீ ஒன்பது அவுன்ஸ் மந்திரி முன்ஷி கூறியுள்ளார்.

6. அரிசிவிலை கூடிய சீக்கிரம் கொஞ்சம் உயருமாம் !

புதிய பூகோளம்

தென்னிந்தியாவின் வயல்களில் நெல் என்பதாக ஒரு விதச்செடி பயிரிடப் பட்டு வருகிறது; அதில் மஞ்சள், சிவப்பு, கருப்பு, வெள்ளை நிறங்களில் அரிசி என்ற ஒரு பொருள் விளைகிறது. அதை அங்குள்ள மக்கள் ஒருகாலத்தில் உணவாக உட்கொண்டார்களாம்!

—கில்லாடி

தெளிவு

இலையுதிர் காலம் மாய்ந்து, இலை துளிர் காலம் வந்தது. எலும்புக் கூடுபோலக் காட்சியளித்துக் கொண்டிருந்த அந்தப் புன்னை மரம், தங்கநிறத் தளிர்கள் விட்டுப் பசுமைகாட்ட ஆரம்பித்தது.

எங்கிருந்தோ இரு காக்கைகள் பறந்து வந்து அந்த மரத்தில் உட்கார்ந்தன. சட்டசபை மாற்ற இடம் தேடும் நமது மந்திரிகளைப் போல, அம்மரத்திலுள்ள கிளைகளனைத்தையும் கூர்ந்து பார்த்தன அவை! மரத்தின் உச்சியில், ஒரு கிளையிலிருந்து, முக்கிளைகள் பிரிந்து சென்றிருந்தன......

இருகாக்கைகளில் ஒன்று, பறக்கமுடியாமல் பறந்து போய், அம்முக்கிளைகளின் மத்தியில் உட்கார்ந்தது; பிறகு சுற்றி வளைத்துப்படுத்துப் பார்த்தது! அடுத்த விநாடி அவ்விரு காக்கைகளும் அங்கிருந்து பறந்துபோய் விட்டன!... மீண்டும் வந்தன......மீண்டும் பறந்தன!

மறுநாள் பொழுது சாய்வதற்குள் புன்னைமரத்தின் உச்சியில்—முக்கிளைகள் பிரிவதின் மத்தியில்—அழகான கூடு ஒன்று கட்டப்பட்டிருந்தது!...

பெண் காக்கை கூட்டில் அமர்ந்து 'பிரசவவேதனை'ப் பட்டுக்கொண்டிருந்தது! தன் 'மனைவி' படும் வேதனையைக் காணச் சகிக்காமல், மரத்தைச் சுற்றிச் சுற்றிப் பறந்து கரைந்து கொண்டிருந்தது ஆண்காக்கை!...

நாற்பத்தெட்டு மணி நேரம் நகர்ந்து மறைந்தது...காக்கைக் கூட்டில், இரு நீலநிறமான முட்டைகள் பளபளத்துக் கொண்டிருந்தன!...இரு காக்கைகளும் மாறி மாறி அம்முட்டைகளை அடைகாத்தன!...'ஓயா உழைப்பால்' அவ்விரு காக்கைகளுக்குமே பசி பிறந்து விட்டது! ஆதலால் அவையிரண்டும் இரை தேடப் பறந்து விட்டன!...

படபடவெனச் சிறகை வீசிப் பறந்து வந்து, அந்தப் புன்னை மரத்தில் உட்கார்ந்தது ஒரு குயில்! கறுப்புமார்க்கட்காரனைப் போல அப்புன்னை மரத்தைத் திருதிருவெனச் சுற்றிப் பார்த்தது. அதன் 'கழுகுப் பார்வை'யில் எப்படியோ அந்தக் காக்கைக் கூடு தென்பட்டுவிட்டது. முன்பின் யோசியாமல் ஒரே தாவாகத் தாவி அக்கூட்டில் படுத்துக்கொண்டது குயில்!

சில விநாடிகள் பறந்தன!...

குயில் கூட்டிலிருந்து பறந்து போய் விட்டது! திரும்பி வர வேண்டுமென்ற எண்ணமே இல்லாமல் அது பறந்து விட்டது!... காக்கைக் கூட்டில் இப்போது மூன்றுமுட்டைகள் இருந்தன!...

இரை தேடச் சென்றிருந்த காக்கைகள் திரும்பி வந்து கூடடைந்தன...வழக்கம் போல அடைகாத்தன...ஆனால் கூட்டில் மூன்று முட்டைகளிருப்பதை அவை இரண்டுமே கவனிக்கவில்லை! காரணம், அந்தத் 'திருட்டு'க் குயில் இட்டு விட்டுப்போன முட்டையும் நீலநிறமாக இருந்ததுதான்.

கடிதத் தொடர்பு!

உலகின் பல பாகங்களிலுமுள்ள ஆண், பெண்—மாணவ, மாணவிகளுடன் கடித மூலம் தொடர்பு கொண்டு உலகியலை நன்கறிய அரிய சந்தர்ப்பம். விவரங்களுக்கு 4 அணை தபால் தலையுடன் எழுதுக.

KANSARS CONCERN
International Pen-friend Associates
13, Kothandaramier St.,
Madras—21.

Telegram : 'Puntcompany'
Telephone : 55085

பண்ட் & கம்பெனி

(Estd. 1890)

உறுதியான தோலினால் அழகான சூட்கேஸ், மணிபர்ஸ், ஸ்லிப்பர்ஸ், சான்டல்ஸ், பெல்ட் முதலியன நாங்கள் செய்கிறோம். உங்கள் தேவைக்கு எழுதுங்கள்.

PUNT & COMPANY
Chrome Leather Works
170, Broadway, G. T. MADRAS.

மேலும் சிலநாட்கள் புதைந்தன...

மூன்று முட்டைகளையும் உடைத்துக்கொண்டு மூன்று குஞ்சுகள் வெளிப்பட்டன!... காக்கைகளுக்குக் கரைகாணு மகிழ்ச்சி!... தம் வயிற்றைச் சுருக்கிக் குஞ்சுகளுக்கு இரை ஊட்டி வளர்த்தன!...

குஞ்சுகள் வளர்ந்து இறக்கையும் முளைத்து விட்டது!... ஆனல்?... இரு குஞ்சுகள், அப்பட்டக்கறுப்பாக—காக்கைக்குஞ்சுகளாக—இருந்தன... மற்றென்றின் உருவத்திலும், நிறத்திலும் மட்டும் சிறிது வேறுபாடு வெளிப்பட ஆரம்பித்தது!... காக்கைகள் இப்போதுதான் அக் குஞ்சைக் கூர்ந்து நோக்கலாயின. தம் நிறத்திலிருந்து வேறுபட்டு, கறுமையில் வெண்புள்ளிகளுடன் இருக்கும் அக்குஞ்சு, குயிலினத்தைச் சேர்ந்தது என அறிந்ததும், அதைக் கூட்டிலிருந்து இழுத்துக் குத்திக் கீழே தள்ளி விட்டன!...

இன்று உலகில், மனித சமுதாயம், காக்கை இனம், குயில் இனம் போன்ற இரு இனங்களாகத்தான் பிரிந்து நிற்கின்றது!... ஒன்று ஆண்டை, பிறிதொன்று அடிமை!... மேலினம், கீழினத்தை என்றுமே ஏமாற்றி, அதன் உழைப்பால் உல்லாச வாழ்வு வாழ்ந்துகொண்டு வருகிறது, காக்கையை ஏமாற்றும் குயிலைப் போல!...

ஆனல் அந்தக் காக்கைகளுக்கு ஏற்பட்ட 'தெளிவு' போன்று, இந்தக் கீழினத்துக்கும் ஒருநாள் ஏற்பட்டு விட்டால்......?

—**ஜெகசிற்பியன்**

தோழி இல்லை!

சி. திருநாவுக்கரசு

"பொன்னாடிப் போதாடிப் புரண்டுபாயும்
புனலாடிக் கொண்டிருந்தோம்; சுழியிற் சிக்கித்
தன்னாற்றல் அவளிழந்தாள்! வந்த வீரன்
தன்வலியால் கரைசேர்த்துக் காதல் சேர்த்தான்!
பின்னாளும் அவன் நினைவாய் நைந்தாள்!" என்று
மெல உரைக்க இலக்கியத்தில் தோழி உண்டு!
என்னாசைக் குகந்த அவர் செயலைப் பற்றி
எடுத்தன்னைக் குரைத்திடவோர் தோழி இல்லை!

"மதுவுண்டு கருவண்டு பாடும் காவில்
மலர் கண்டு மகிழ்ந்திருந்தோம்; வந்த வீரன்
நிதிகண்ட வறிஞன்போல் உவந்து நின்று
நீட்டினன்கை மலரையவள் முன்னே! பின்னர்
இதிலுண்டு காதல் எனச் சொல்வானேன?" என்(று)
எடுத்துரைக்க இலக்கியத்தில் தோழி உண்டு!
மதி கண்ட வான்போல் என் காதல் வாழ்வை
மற்றவர்க்கிங் குணர்த்திடவோர் தோழி இல்லை!

"பொங்குமத வெங்களிறொன் றன்று காட்டில்
பொங்குமெழில் தலைவி தனி இருத்தல் கண்டு
கொங்கை எனும் களிற்றொடுபோர் செய்ய வந்த
கொடுமையினை அங்குவந்த வீரன் கண்டான்;
செங்கையால் வேல் எறிந்தவளைக் காத்தான்!" என்று
செப்புதற்கோ இலக்கியத்தில் தோழி உண்டு!
பொங்குகின்ற என்காதல் நிலையை அன்னை
புரிந்துகொள்ளு மாறுரைக்கத் தோழி இல்லை!

தகப்பனும் மகளும்

கு. அழகிரிசாமி

இது ஒரு சிறுகதை; கட்டுரையல்ல. கீழே காணப்படுவது வீடு கட்டுவதற்காகப் போட்ட பிளான் அல்ல; ஆனால் ரயில் வண்டிப் பெட்டி ஒன்றின் உட்புறத்தின் பிளானாகும்.



பிளானைப் பார்த்துக் கொண்டீர்களா? இனிமேல் விபரத்தைப் பாருங்கள்:

1. கதாநாயகி உட்கார்ந்திருந்த இடம்.

2. கதாநாயகியின் தங்கை உட்கார்ந்திருந்த இடம்.

3. என் நண்பர் கோபாலன் உட்கார்ந்திருந்த இடம். (இவரையும் என்னையும் கதா நாயகர்களாக்கக் கடும் பிரயாசைப்பட்டார் கதாநாயகியின் தகப்பனார். ஆனால் நாங்கள் அதற்கெல்லாம் விட்டுக் கொடுப்போமா? அவரையே கதாநாயகராக்கி விட்டோம். விபரத்தைக் கதையில் காண்க.)

4, 5, 6, 7—கதைக்கு நேரடியான சம்பந்தமில்லாத பேர்வழிகள் உட்கார்ந்திருந்த இடங்கள்.

8. நான் உட்கார்ந்திருந்த இடம்.

9. கதாநாயகியின் தகப்பனார் உட்கார்ந்திருந்த இடம். கதாநாயகரும் இவரே.

10, 11, 12, 13, 14 இந்த ஐந்தும்கூடக் கதைக்கு நேரடியான சம்பந்தமில்லாத பேர்வழிகள் உட்கார்ந்திருந்த இடங்களே.

ஜ, ஜ. இந்த இரண்டு எழுத்துக்களும் முறையே ஜன்னல், ஜன்னல் என்ற வார்த்தைகளைக் குறிப்பிடுகின்றன.

× × = கதாநாயகரின் இரண்டு பெட்டிகள்.

இதுதான் விபரம்.

இனிமேல் கதையைச் சொல்லுகிறேன். அன்றொரு நாள்; அதாவது சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒருநாள். என் நண்பர் கோபாலன் டிசம்பர் விடுமுறையைக் கழிக்கச் சென்னைக்கு வந்திருந்தார். டிசம்பர் விடுமுறை முடிந்ததும், ஊருக்குத் திரும்பினார். நானும் இரண்டு வாரம் 'லீவு' எடுத்துக் கொண்டு கோபாலனுடன் ஊருக்குப் புறப்பட்டேன். அவருடைய ஊரும் என்னுடைய ஊரும் ஒரே ஊர்தான். எனக்குச் சென்னையில் வாரக் கணக்கில் விடுமுறை கிடைக்காத வேலை. அவருக்கு மாதக் கணக்கில்கூட விடுமுறை கிடைக்கும் வாத்தியார் வேலை. எங்கள் இருவருக்குமே வயது இருபத்தைந்துதான் ஆகிறது. ஆனால் கல்யாணம் ஆகவில்லை.

இதற்கு என்ன காரணம்? என் சம்பந்தப்பட்டமட்டில் காரணத்தைச் சொல்லி விடுகிறேன். எனக்கு முறைப் பெண்களாக உள்ளவர்களில் ஒருத்திகூட அழகான பெண்ணாக இல்லை. ஒரு வேளை 'முறைப் பெண்கள்' என்ற காரணத்தினாலேயே அவர்கள் அழகில்லாதவர்களாகக் காணப்படலாம். அது எப்படியும் போகட்டும். நான் அழகான பெண்ணைத்தான் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்று விரும்பி, கல்யாண காலத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தேன். என் கண்ணில் பல அழகான பெண்கள் தட்டுப் படாமல் இல்லை. சில பெண்கள் தூரத்திலிருந்து பார்க்கமட்டும் அழகாகவும், சில பெண்கள் போட்டோ படத்தில் மட்டும் அழகாகவும், சில பெண்கள் மூக்குக் கண்ணாடி போட்டிருக்கும்போது மட்டும் அழகாகவும், சில பெண்கள் வார்ப் பேச்சில் மட்டும் அழகாகவும், சில பெண்கள் அலங்காரம் செய்து கொள்ளாதபோது மட்டும் அழகாகவும், சில பெண்கள் மூக்குமட்டும் அழகாகவும், சில பெண்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டால்மட்டும் அழகாகவும் —இப்படியே இருந்தார்களே ஒழிய உண்மையில் அழகாக இல்லை. ஆனால் சில பெண்கள் மட்டும் உண்மையில் அழகாகத் தான் இருந்தார்கள்; இருந்தும். அவர்களை என் நண்பர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் ஒப்புக்கொள்ளத் தயாராக இருந்தாலும், அந்த அழகிகள் என்னைக் கல்யாணம் செய்து கொள்ளத் தயாராக இல்லை. ஏனென்றால் நான் அழகாக இல்லாததே காரணம். இப்படியாக நான் அழகியை விரும்பிய காரணத்தால் எனக்கு, இதுவரையில் கல்யாணமே ஆக வில்லை. ஆனால் எப்பொழுதாவது ஆகும் என்றுதான் நம்புகிறேன். என் எதிர்கால மனைவி, (நீங்கள் பிரமச்சாரிகளாக இருந்தால்) உங்கள் எதிர்கால மனைவியைப் போலவே பேரழகி. ஒரு இம்மியளவு குறைந்த அழகோடு, எந்தப் பெண் வந்து எனக்குக் கனகாபிஷேகம் செய்தாலும், நான் அவளை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இது நிச்சயம். இப்படிப்பட்ட என்னைப்பார்த்து, கதாநாயகர் என்னென்னவோ சந்தேகப்பட்டது பைத்தியக்காரத்தனம் அல்லவா? நிற்க.

கோபாலன் கல்யாணம் செய்து கொள்ளாத காரணம் எது என்று எனக்குத் தெரியாது. ஆனால், அவர் அழகான பெண்ணுக்காகக் காத்திருக்கக் கூடாது என்பது தான் என் பிரார்த்தனை. அப்படி அவர் காத்திருந்தால் பழங்காலத்து ராஜகுமாரர்களைப் போல ஒரு குறிப்பிட்ட பெண்ணுக்காக நாங்கள் இருவரும் சண்டை போடும்படியாகிவிடும் அல்லவா? இதுவும் நிற்க.

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஏறினோம். இரவு எட்டு மணி இருக்கும். எங்களுக்குச் சௌகரியமாக இடம் கிடைத்தது. ஜன்னலை ஒட்டி எதிராக நானும்கோபா

லனும் உட்கார்ந்துகொண்டோம். 'வறுமையில் செம்மை' என்பது போல, மூன்றாம் வகுப்பிலும், இந்த இடம் மாமனார் வீட்டுக்குச் சமானமான பெருமையை உடையது. நான் உட்கார்ந்திருந்த பெஞ்சில் நிறைய ஆட்கள் இருந்தார்கள். எதிர் வரிசைப் பெஞ்சில் மட்டும் மேற்கொண்டு ஒரு ஆளுக்கு இடம் இருந்தது. அதுவும் அந்த ஆள், என் தங்கையின் வாத்தியாரம்மாள் போலக் கனமான ஆளாக இருக்கக் கூடாது. அந்த இடத்துக்கு யாரும் வந்துவிடப் போகிறார்களோ என்ற பயத்துடன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு பிரயாணி தம்முடைய படுக்கையைச் சிரமப்பட்டுத் தூக்கிக் காலி பிடத்தில் வைத்துக் கொண்டு, வருகிறவர்களிடமெல்லாம். "ஒரு ஆள் வெளியே போயிருக்கிறது. இது அவருடைய படுக்கை" என்று தம்முடைய மனச்சாட்சியையும் எங்களுடைய மனச்சாட்சியையும் துச்சமாக மதித்துப் பொய் சொல்லி வந்தார்.

ரயில் கிளம்பி விட்டது. இனி செங்கற்பட்டு போனால்தான் வண்டி நிற்கும். பொய் சொல்லக் கூசாத அந்தப் பிரயாணி, படுக்கையை எடுத்துக் கீழே வைத்துவிட்டு சாம்பார் சாதப் பொட்டலத்தை அவிழ்த்தார். சாப்பிட்டார். கையைக் காகிதத்தில் துடைத்துச் சுத்தம் பண்ணிக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டார். அது எச்சில் கையாயிற்றே என்று அருவருப்புக் கொண்ட நண்பர் அவரை ஒட்டி உட்காராமல் ஜன்னல் பக்கமாக ஒதுங்கி உட்கார்ந்து கொண்டார்.

நான் வெற்றிலையைப் போட்டுத் துப்பிக்கொண்டே பேசிக் கொண்டிருந்தேன். எங்கள் ஊர்க்காரர் அங்கு ஒருவரும் இல்லாததால் ஊர் விவகாரங்களைப்

பயமில்லாமல் பேசிக்கொண்டே வந்தோம். எங்களுடன் படித்த அந்தப் போக்கிரிப் பயல் மகாதேவன் ஒரு பெண்ணைக் காதலித்துக் கொண்டிருந்தான். இது சுத்த ஒழுக்கக் கேடான காரியம் என்று எல்லோரையும் போல நாங்களும் திட்டிக் கொண்டே போனோம். நான் சொன்னேன் "பெண் என்றால் இந்தக் காலத்துப் பயல்கள் பேயாகப் பறக்கிறார்கள்! சுத்தக் காலித்தனம்! அக்கா தங்கைகளுடன் நாமும் பிறந்திருக்கிறோமே என்ற எண்ணமே இந்தப் பயல்களுக்குக்கிடையாது. இதற்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? இந்தக் காலத்துப் பெண்களேதான். அந்தக் காலத்தில் ஆண்களுக்கு எதிரில் பெண்கள் வரவேமாட்டார்களாம். இப்பொழுது என்னடா என்றால், தடுக்கி விழுந்தால்..."

"இதைத் தான் சென்னை பஸ்களிலே நேருக்கு நேராகப் பார்த்தேனே! ஆனாலும், அதற்காக ஆண்கள் ஒழுக்கத்தை விட்டு விடக் கூடாது தான். ஆனால், அந்த மகாதேவன் பயலுக்கு யார் புத்தி சொல்லுவது? சொன்னாலும் கேட்கப் போகிறானா? அவன் அந்தப் பெண்ணையே காதலித்து, அந்தப் பெண்ணையே கல்யாணம் செய்து கொள்ளப் போகிறானாம்! வேறு யாரையும் ஏறிட்டுக் கூடப் பார்க்க மாட்டானாம். ஒரே பிடிவாதமாகச் சாதிக்கிறான்..."

"அயோக்கியப் பயல்!... அது சரி, அந்தப் பெண் அப்படி ஒன்றும் அழகி இல்லையே!" என்றேன் நான்.

"அழகியாக இல்லை யென்றால் காதலிக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறது?" என்றார் கோபாலன்.

"கூடாது என்றுதான் நானும் சொல்லுகிறேன்."

இவ்வாறு பேசிக் கொண்டே போனோம். பக்கத்தில் உட்கார்ந்திருந்த பிரயாணிகள் எங்கள் பேச்சைத் தவிர வேறு எதையும் காதால் கேட்கவில்லை. நாங்கள் பேசியதெல்லாம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களுக்குத் தெரியும் என்ற விஷயம் எனக்கும் தெரியும்; கோபாலனுக்கும் தெரியும்.

செங்கற்பட்டுக்கு இன்னும் பத்து மைல் தூரத்துக்கு மேலேயே இருந்தது. அந்தப் பத்து மைல் தூரமும் மகாதேவனைத் திட்டிக் கொண்டே போனோம். வண்டி செங்கற்பட்டுக்கு வந்தது. கதாநாயகியும் வந்து சேர்ந்தாள். நாம் உட்கார்ந்திருக்கும் வண்டிக்குத் தானே எல்லாப் பிரயாணிகளும் வருவது வழக்கம்! அந்த வழக்கப்படியே கதாநாயகரும் அவர் மூத்தமகளாகிய கதாநாயகியும், அப்புறம் அவருடைய இரண்டாவது மகளும் வந்து சேர்ந்தார்கள். மூத்த மகளைப் பார்த்தமாத்திரத்திலேயே அவள் அழகில்லை யென்பதைக் கண்டு கொண்டேன். அவளை அந்த நிமிஷத்திலேயே மறந்துவிட்டேன். 'இவளெல்லாம் ஞாபகத்தில் இடம் பெறக்கூடியவளா? இவளை விட ஆயிரம் மடங்கு அழகாக இருந்த பெண்களையே நான் ஒதுக்கித் தள்ளிவிட்டேனே!'

கதாநாயகருக்கு உட்கார இடம் இல்லை. என் ஜன்னலை மறைத்துக் கொண்டு நின்றார். கதாநாயகி எதிர்ப் பெஞ்சில் காலியாக இருந்த இடத்தில் உட்காரலாமா கூடாதா என்று யோசித்தவண்ணம் தகப்பனருடைய முகத்தைப் பார்த்தாள். தகப்பனர் பெஞ்சையும் எங்களையும் பார்த்தார். ஒரு நிமிஷ ஆலோசனைக்குப் பிறகு, என் நண்பர் கோபாலனைப் பார்த்து, "ஸார்! நீங்கள் கொஞ்சம் அந்தப் பக்கம் நகர்ந்து உட்கார்ந்து கொண்டால் இவர்கள் இரண்டு பேரும் உட்கார்ந்து கொள்ளுவார்கள். கொஞ்சம் நகர்ந்து கொள்ளுகிறீர்களா?" என்று கும்பிடாத குறையாக வேண்டிக் கொண்டார். கோபாலனும், 1. லக்கமிட்ட இடத்திலிருந்து 2. லக்கமிட்ட இடத்திற்கு வந்துவிட்டார். அதுவும் போதாதென்று 2. லக்கமிட்ட இடத்தில் கால் பாகத்தைக் காலி செய்தும் கொடுத்தார். இந்த ஒன்றேகால் இடத்தில் கதாநாயகி ஜன்னலை ஒட்டியும், தங்கை அடுத்தபடியாகவும் உட்கார்ந்து கொண்டார்கள். செங்கற்பட்டு ஸ்டேஷனில் தாகத்துக்காக ஒரு சோடாவாங்கிக்குடித்தேன். வெற்றிலை பாக்குப் புகையிலையும் ஏராளமாக வாங்கிக் கொண்டேன். மதுரை வரையிலும் இந்த வெற்றிலை போதும் என்று எண்ணி மகிழ்ந்தேன். என் மகிழ்ச்சிக்கு இடையூறு செய்து கொண்டிருந்தது மோர் மாதிரி தண்ணீராக இருந்த சுண்ணாம்புதான். அது வெற்றிலையில் ஒட்டாமல் தாமரையிலைத் தண்ணீராக உருண்டு ஓடி என் வேட்டி சட்டைகளை நனைத்துவிட்டது. இருந்தாலும் அடுத்த ஸ்டேஷனில் சுண்ணாம்பு தயார் பண்ணிக் கொள்ளலாம் என்ற திடத்துடன், ஒரு முறை வெற்றிலை போட ஆரம்பித்தேன். நான் துப்புவதற்கு வழியில்லாமல், ஜன்னலை மறைத்துக் கொண்டார் கதாநாயகர். இதற்கு

என்ன உபாயம் செய்யலாம் என்று திகைத்துக் கொண்டிருக்கும்போது கோபாலன் பழைய பேச்சைத் தொடர்ந்தார். அந்தப் பயல் மகாதேவனைப் பற்றியே பேச ஆரம்பித்தார். "அந்தப் பேச்சை விடுங்கள் ஸார்" என்று எரிச்சலோடு சொன்னேன். இந்த எரிச்சலுக்கு மூலகாரணம் மகாதேவனுடைய காதல் விவகாரம் அல்ல என்பதும், துப்புவதற்கு வழியில்லாமல் கதாநாயகர் ஜன்னலை மறைத்துக் கொண்டிருந்ததுதான் என்பதும் இங்கே குறிப்பிடவேண்டிய விஷயங்களாகும். இந்தச் சந்தர்ப்பத்தில், "ஓயாமல் பேசுவதன் மூலம் மகாதேவனையே கதாநாயகனுக்கு கிறீர்களே, நான் ஒருவன் இங்கு இல்லையா? என்னைக் கதாநாயகனுக்குங்களேன்" என்று எங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுவதுபோல எங்களிடையில் தலையை நீட்டினார் கதாநாயகர். என் நண்பர் கோபாலனைப் பார்த்து, "ஸார், கொஞ்சம் நகர்ந்து......" என்று குழைவோடு சொன்னார். கோபாலன் அப்படியே நகர்ந்து கொண்டார். அவர் முக்கால் இடத்திற்குள் அடங்கி ஒடுங்கி உட்கார்ந்திருந்தாலும், காற்றுப் பட்டுச் சட்டை சற்று விலகி ஒரு அரை அங்குல அளவுக்குக் கதாநாயகியின் தங்கையினுடைய பாவாடையில் வந்து ஒட்டிக் கொண்டிருந்தது. இதைக் கண்டு சகியாத கதாநாயகர் என் நண்பரை ஒதுங்கி உட்காரச் சொன்னார். ஒதுங்கி உட்கார இடமில்லாததால் சட்டையைமட்டும் இழுத்து விட்டுக் கொண்டார் கோபாலன்.

நான் வெளிப்பார்வைக்கு மகாசாது போல் காணப்பட்டாலும், உண்மையில் கொஞ்சம் வம்புக்காரப் பேர்வழிதான்; தகராறு வந்தால் லேசில் விடமாட்டேன். என் நண்பர் கோபாலனோ நல்லவனுக்கு நல்லவர்; சௌடிக்கு சௌடி. 'என்னடா. இந்தக் கதாநாயகர், கோபாலனைத் தீண்டத் தகாதவராக நினைத்து விட்டாரா? அப்படியே நினைத்தாலும், ரயிலில் இப்படி வித்தியாசம் பார்ப்பது கிடையாதே! இவர் பரம வைதீகம் பிடித்தவராகத்தான் இருக்க வேண்டும். போகட்டும். வயதில் மூத்தவர். சொன்னபடி கேட்போம்' என்று நினைத்து, எதையும் பொருட்படுத்தாதவன் போல நான் உட்கார்ந்திருந்தேன். இருந்தாலும் மனம் நிம்மதியடையவில்லை. அது என்னென்னவோ நினைத்தது. 'சட்டை உரசினால் ஜாதி கெட்டு விடுமா? இல்லை......இவர் சுத்த அதிகப் பிரசங்கியாக இருக்க வேண்டும். இது உலகத்தில் இல்லாத புதுமையாக இருக்கிறதே!' என்று மனத்தினுள் கோபப் பட்டேன். கதாநாயகரை ஒரு முறை எறிட்டுப் பார்த்தேன். அவருக்கு வயது நாற்பதிருக்கும். கிராப் தலை; சிவப்பான ஆள்; பள்ளிக்கூடத்திலும்கல்லூரியிலும் படித்தவர் என்பதைத் தெரிவிக்கும் முகத் தோற்றம். வெள்ளை ஜிப்பா; வெள்ளை வேட்டி. நடுத்தர உயரம்; நடுத்தர கனம்.

அப்புறம் கதாநாயகியைப் பார்த்தேன். அவளுக்கு வயது அதிகமாய்ப் போனால் பதினன்கு தான் இருக்கும். ஆனால் வயது

தம்பி தங்கைகளுக்கு
அரிய வாய்ப்பு

ரூ. 1-10-0 அனுப்பினால் தபாற் செலவின்றி ஒரு செட் அனுப்பிவைக்கப் பெறும்.

மணி அடித்தது	0	4	0
இரு கதைகள்	0	4	0
சவுக்கடி தர்பார்	0	6	0
சாம்பு	0	2	0
சினிமாவில் ரங்கன்	0	2	0
சந்தனத் தேவன்	0	2	0
குமரித் தீவு	0	2	0
சாரநாத்	0	2	0
என் கடன்களிப் பூட்டுதல்	0	2	0

"பொன்னி"
சென்னை 21.

வராத பெண். வயது வந்த பெண்ணைப்போல மேலாக்குப் போட்டு உடைஉடுத்தியிருந்தாள். நாணம், வெட்கம் முதலியவை யெல்லாம் வயது வந்த பெண்ணுக்கு இருப்பதை விட அதிகமாக இருந்தன. இருந்து விட்டுப் போகட்டும். அதைப் பற்றிக் கவலையில்லை. இவளை நான் காதலிப்பதாக இல்லை; என் நண்பரும் அப்படியே. சிவப்பு உடம்பு; நீண்ட முகம்; நல்ல முகக்களை. ஒற்றை நாடி உடல். முக்கால் வாசி நேரமும்ரயிலுக்கு வெளியேபார்த்துக் கொண்டிருப்பதில் விருப்பம்.

கதாநாயகியின் தங்கைக்கு வயது ஏழுக்கு மேல் நிச்சயம் இராது. பாவாடையும் சட்டையும் போட்டிருந்தாள். பார்த்தால் ஏதாவது பலகாரம் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று தோன்றும் வண்ணம் குழந்தை அவ்வளவு அழகாக இருந்தது. என் தங்கையைக் காட்டிலும் அழகு. சௌகரியத்தை உத்தேசித்து இவளுக்கு சாஜி என்று பெயர் வைத்துக் கொள்ளுவோம்.

ரயில் போய்க் கொண்டிருந்தது. முப்பது மைலாவது போயிருக்கும். கோபாலனின் சட்டை பழையபடியும் சாஜியின் பாவாடையை உரசியது. இதைமிகக் கவனமாகப் பார்த்துக் கொண்டார் கதாநாயகர். உடனே கோபாலனைப் பார்த்து, "ஸார். கொஞ்சம்......" என்று உஷார்ப் படுத்தினார். கோபாலன் முன் போலவே சட்டையை இழுத்து விட்டுக் கொண்டார்.

எனக்கு மிகவும் கோபம் வந்து விட்டது. அவர் மேல் 'வள்' என்று விழுவோமா என்று நினைத்தேன். ஆனால், ரயிலின் கடாபுடா முழக்கத்தில் என் கோப முழக்கம் அமுங்கி விடும் என்பது ஒருபுறமிருக்க, வாயைத் திறப்பதற்கு வழியில்லாமலும் இருந்தது. வாய் நிறையப் புகையிலைச்சாறு. துப்புவதற்கு வழியில்லாமல் போகவே, பலூன் பருப்பது போல வாய் புடைத்துக்கொண்டும் வேறு இருந்தது. இருந்தாலும் கோபத்தைக் காட்டுவதற்கு ஏதேனும் செய்தாக வேண்டும் என்று கதாநாயகரைப் பார்த்து, "ஷார்! இப்படி வந்து உக்காருங்கழேன்" என்று அண்ணாந்து மேலே பார்த்துக் கொண்டே சொன்னேன். கொஞ்சம் ஜன்னல் பக்கமாக நகர்ந்து உட்கார்ந்து கொண்டேன். எனக்கும், என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு பிரயாணிக்கும் நடுவே

வந்து உட்கார்ந்தார் கதாநாயகர். அவர் உட்காருவதற்கு முன்பே நான் எழுந்து ஜன்னல் வழியாகத் தலையை நீட்டி, முடிகிற மட்டும் குப்புறக் குனிந்து வெற்றிலைச் சாரத்தைத் துப்பினேன். பிறகு வந்து உட்காரப் போகும் போது என் இடத்தில் பாதியைக் கதாநாயகர் அடைத்து விட்டார் என்பது தெரிந்தது. கடைசியில் நான்தான் ஒண்டவந்த நாய் மாதிரி பெஞ்சு நுனியில் தொடுக்கிக் கொண்டு உட்கார்ந்து கொள்ள நேர்ந்தது. எனக்கு அப்பொழுது என்ன கோபம் தெரியுமா? ரயில் போய்க்கொண்டிருந்தது.

"அந்தப் பயல் பார்ப்பதற்குக் கௌரவமாகத் தான் இருக்கிறான் ஸார். அவன் யோக்கியன் மாதிரி நடப்பது ஒன்றே போதும், அவன் பரம அயோக்கியன் என்பதைக் காட்ட" என்று கோபாலனிடம் மகாதேவனைப் பற்றிச் சொன்னேன். ஆனால் மகாதேவனைப்பற்றிச் சொன்னேன் என்பதைவிடக் கதாநாயகரைப்பற்றிச் சொன்னேன் என்பது தான் பொருத்தம். கதாநாயகர்மட்டும் இங்கே இல்லை என்றால் மகாதேவனை இப்படித் திட்டியிருக்க மாட்டேன். இதைப் புரிந்து கொண்டுதானோ என்னவோ கோபாலன் விழுந்து விழுந்து சிரித்தார்; ஒரு தினுசாகப் பேசவும் ஆரம்பித்தார்.

"சுத்தப் போக்கிரிப்பயல் என்பதுதான் பார்த்த மாத்திரத்திலேயே தெரிகிறதே" என்று கதாநாயகரைப் பார்த்துக் கொண்டே சொன்னார்.

இப்பொழுது நான் சிரித்தேன். கதாநாயகர் எங்கள் இருவரையும் மாற்றி மாற்றிப் பார்த்தார். முகம் 'ஹுர்' என்று இருந்தது. 'நீர் இப்படிப் பார்த்துப் பிரயோஜனம் இல்லை. ஏன் அனாவசியமாகப் பார்க்கிறீர்? உம் மகளை நாங்கள் காதலித்தோமா? உம் மகள் அப்படி ஒன்றும் பூலோக ரம்பையல்ல. இதைவிட அழகிகளை எல்லாம் நாங்கள் கழித்துக் கட்டியிருக்கிறோம்' என்று சொல்லுவதுபோலக் கோபாலன் அவரைப் பார்த்தார். பார்த்து விட்டுப் பையிலிருந்து மூன்று ஆரஞ்சுப் பழங்களை எடுத்தார். எனக்கு ஒன்று கொடுத்தார்; தமக்கு ஒன்று வைத்துக் கொண்டார்; ராஜிக்கும் ஒன்று கொடுத்......இல்லை கொடுக்கப் போனார்.

"வேண்டாம் வேண்டாம்" என்று கையினால் மறியல் செய்தார் கதாநாயகர்.

புதிய நூல்

○

கவியரசர் பாரதிதாசன்
இயற்றிய

இன்பக் கடல் 1-0-0

கவியரசர் நூல்கள் அனைத்தும்
எங்களிடம் கிடைக்கும்,

விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்

○

"பொன்னி" - சென்னை 21

"இல்லை ஸார், குழந்தை தானே?" என்றேன் நான்.

"வேண்டாம்" என்று வைராக்கியமாகச் சொன்னார் க. நா. (கதாநாயகர்).

கோபாலன் அதிக வைராக்கியத்துடன் குழந்தைக்குக் கொடுக்கப் போனார். கதாநாயகர் இருப்பிடத்தைவிட்டு எழுந்துவிட்டார். குழந்தை கை நீட்டி வாங்கிக் கொண்டது. அதை உடனே 'வெடுக்'கென்று பிடுங்கிக் கோபாலன் கையில் கொடுத்துவிட்டார் க. நா. எங்களுக்கு அவமானமாக இருந்தது. மற்றப் பிரயாணிகளுக்கு மத்தியில் எங்கள் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல், "குழந்தை விஷயத்தில் நீங்கள் இப்படி இருக்கக்கூடாது ஸார்" என்று ஒரு முறை சொல்லி வைத்தேன். எங்களுக்கு ராஜியின் முன்னிலையில் பழத்தை உரித்துச் சாப்பிட மனம் வரவில்லை. 'அப்புறம் சாப்பிட்டுக் கொள்ளலாம்' என்று கோபாலனும் சொன்னார். பழங்களைப் பழையபடியும் பையில் வைத்துவிட்டோம். நாங்கள் கொஞ்சம் போக்கிரிகளானாலும் இவ்வளவு தூரம் நாகரிகமாக நடந்து கொண்டோம். கௌரவமானவர்களைப் போல எதிரே குழந்தையை வைத்துக் கொண்டு சுளை சுளையாக உரித்துச் சாப்பிட விரும்பவில்லை.

சுமார் பதினைந்து நிமிஷமாயிற்று. கதாநாயகருக்குத் தூக்கம் வந்துவிட்டது. ஆனால் தூங்குவதற்குப் பயம் என்பதை அவருடைய முகஜாடை காட்டியது. இரண்டு ஓநாய்களுக்கு மத்தியில் இரண்டு மான்குட்டிகளை ஒப்படைத்துவிட்டுத் தூங்கலாமா என்று நினைத்தார் போலிருக்கிறது! நான் சும்மா இராமல் "தூக்கம் வந்தால் வெற்றிலை போடுங்கள் ஸார். இதையும் வேண்டாம் என்று சொல்லிவிடுவீர்களோ!" என்று சிரித்துக்கொண்டே சொன்னேன். உண்மையில் இது நாசுக்குச் சிரிப்பல்ல; கேலிச் சிரிப்புத்தான். க. நா., 'வேண்டாம்!' என்றே சொன்னார். "நான் வெற்றிலை போடுவதில்லை. தேங்க்ஸ்" என்று சொல்லவில்லை. ஒருவேளை கௌரவமானவர்களிடம் அவர் அவ்வாறு சொல்லக் கூடும்...... நான் கேவலம் எண்பது ரூபாய் குமாஸ்தா; என் நண்பர் நாற்பது ரூபாய் வாத்தியார்........

இருக்க இருக்கக் கதாநாயகர் கனத்துக்கொண்டு வந்தாரோ என்னவோ, நான் உட்கார்ந்திருக்கும் உள்ளங்கை இடமும் கரைந்து கொண்டே வந்தது. கடிகாரத்தின் மணி முள் மாதிரி யாரும் அறியாத நிலையில் என் இருப்பிடத்தை நோக்கி அவ்வளவு சாவதானமாக நகர்ந்து கொண்டிருந்தார் க. நா. எனக்குக் கோபம் அதிகமாகிவிடவே, எழுந்து, கீழே இருக்கும் அவருடைய பெட்டிகளின் மேல் உட்கார்ந்துவிட்டேன். அவர் அதைத் தப்பு என்று சொல்லவில்லை. இதைக் கவனிக்காதவர் போலக் கொஞ்சநேரம் இங்கும் அங்கும் பார்த்துவிட்டு, அப்புறம் சம்மணம் போட்டு உட்கார்ந்துகொண்டார். பெஞ்சில் இனி ஒரு ஈ உட்காரக்கூட இடமில்லை.

நான் கீழே உட்கார்ந்திருந்ததும், எனக்கு எதிரே கதாநாயகி

பெஞ்சுமேல் உட்கார்ந்திருந்ததும் எனக்கு ஒரு நாடகக் காட்சியை ஞாபகமூட்டியது. அதாவது பழங் காலத்தில், சிம்மாசனத்தில் இருக்கும் காதலியிடம் காதலன் மண்டியிட்டுக் கெஞ்சிக் காதல் பிச்சை கேட்கும் காட்சியையே ஞாபகமூட்டியது. 'இந்தப் பெண்ணுக்கு அவ்வளவு கௌரவமா?' என்று நினைத்து மறுபுறம் திரும்பிக்கொள்ள நினைத்தேன். அப்போது கோபாலன், "ஸார், வெற்றிலை இருந்தால் கொடுங்கள்" என்று கையை நீட்டினார். நீட்டிய மாத்திரத்தில் சட்டையின் வலது கை காற்றின் காரணமாக எதிர் பாராதவிதமாக ராஜியின் கன்னத்தை உரசவே கதாநாயகர் வெகுண்டெழுந்தார்.

"என்ன ஸார் இது, லேடீஸ் என்கிற மரியாதை கூடக் கிடையாதா? கொஞ்சம் நகர்ந்து உட்காருவதற்கும் வழியில்லை; பரவாயில்லை என்று இருந்தால் ரொம்பவும்..."

"ரொம்பவும் என்ன ஸார்! ரொம்பவும் என்ன?" என்று பயங்கரமாகக் கேட்டார் கோபாலன். சரி, நண்பர் 'ரௌடிக்கு ரௌடி'யாகி விட்டார் என்பதைத் அறிந்து, "கோபாலன்! உஸ், ஏன் சத்தம் போடுகிறீர்கள்?" என்று தடுத்து நிறுத்தினேன். கோபாலன் அடங்கிவிட்டார். கதாநாயகர் மட்டும் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

'இவர் எங்களை என்னவென்று நினைத்து விட்டார்? இல்லை, தம் அருமைக் குமாரிகளைத் தான் என்னவென்று நினைத்து விட்டார்? ஒன்று குழந்தை; மற்றொன்று வயது வராத பெண். நாங்கள் மனதால்கூட இருவர் மீதும் வேறு விதமாக ஆசைப்படவில்லை. அப்படியிருக்க, எங்கள் மனதில் என்ன என்னவோ விஷயங்களை ஞாபகப் படுத்துகிறார் இந்த முட்டாள் மனிதர். நாங்கள் அந்த இருவரையும் காதலிக்கப் போவதே இல்லை. அதிலும் ஒன்று பச்சைக் குழந்தை. அந்தக் குழந்தையை விட்டுவிட்டுப் பழம் சாப்பிடக்கூட நாங்கள் விரும்பவில்லை. குழந்தையின் பால் வடியும் முகத்தைப் பார்த்ததும், அதற்கு ஏதாவது பரிசு கொடுத்தால் தேவலை என்றுகூட எனக்குத் தோன்றியது. இந்தக் குழந்தையைப் பற்றி எந்த அயோக்கியனும் வேறு விதமாக நினைக்க முடியுமா? இதைப் பற்றி நினைப்பதுகூட ஆபாசமாக இல்லையா? எங்களுக்கே ஆபாசமாக இருக்கும்போது, பெற்ற தகப்பனுக்கு எப்படி இருக்க வேண்டும்? தகப்பனார் உள்ளத்தில் இந்த எண்ணம்தான் உதிக்குமா?' என்று பலவாறாக நான் நினைத்தேன். அப்புறம் சிந்தனை வேறு விதமாகத் திரும்பியது:

'ஒருவேளை பெரிய பெண்ணை முன்னிட்டுத்தான் இவ்வளவு 'கார்பார்' நடக்கிறதோ? இருந்தாலும்தான் என்ன? அதற்கும் கோபாலனுக்கும் நடுவில், ஒரு ஏழுவயதுக் குழந்தை உட்கார்ந்திருக்கிறதே! கோபாலனின் உடம்பில் காந்தமா இருக்கிறது, ஆளை ஊடுருவிக்கொண்டு அடுத்த ஆள் மீது பாய? அதுவும் சட்டை பட்டமாத்திரத்தில்... சீச்சீ...இந்த முட்டாள் மனித

னுக்காக நாமும் இப்படிப்பட்ட யோசனைகள் செய்யக் கூடாது.'

கோபாலனுக்கு வெற்றிலையைக் கொடுத்தேன். ரயில் போய்க் கொண்டிருந்தது.

கதாநாயகருக்குப் பதிலாகக் கதாநாயகி தூங்கி விட்டாள். தூங்கி விழும்போது சாமியாடுவது போல இருக்கும் அல்லவா? அத்துடன் அது சில சமயங்களில் ஹாஸ்ய ரசனையைக் கிளப்பக் கூடியதாகவும் இருக்கும். இருந்தாலும் இளம் பெண் தூங்கி விழுவதைக் கண்டு சிரிப்பது தப்பு என்று வாயை மூடிக் கொண்டு இருந்தேன். ஆனால் ராஜி சும்மா இருந்தாளா? சும்மா இருக்க வில்லை. 'அப்பா! அப்பா!' என்று சிரித்துக்கொண்டே அப்பாவைக் கூப்பிட்டாள். அப்பா மிடுக்காகத் திரும்பிப் பார்த்தார். "அக்காவைப் பார்" என்று விரலால் சுட்டிக்காட்டி விட்டுச் சிரித்தாள். கதாநாயகருக்கு அளவு கடந்து கோபம் வந்து விட்டது. நான்கு பேருக்கு மத்தியில் அக்காளைக் காட்சிப் பொருளாக மாற்றியதற்காக ராஜியின் மீது அவருக்குப் பொல்லாத கோபம் வந்து விட்டது. கண்களை உருட்டி விழித்து, "இதோ! சும்மா இருக்க முடியவில்லையா?" என்று அதட்டினார். விளையாட்டில் தங்தையும் வந்து கலந்து கொள்ளுவார் என்று குழந்தை எதிர்பார்த்தது நேருக்கு மாறாக முடிந்தது. ராஜி பயந்து விட்டாள்; அவமானத்தால் முகம் செத்துப் போய்விட்டது. இதைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. ஆனால் இதே விஷயத்தைக் கோபாலனிடம் தெரிவிப்பது எப்படி? பழையபடியும் அந்த மகாதேவனை வைத்துக் கொண்டே காரியத்தைச் சாதிக்க நினைத்தேன்.

"கோபாலன்! மகாதேவன் ஒரு மூடன். படித்திருக்கிறான் என்றாலும் பயன் என்ன? உலகத்தில் எத்தனையோ முழுமூடர்களும் தான் படித்திருக்கிறார்கள். தடிப்பயலுக்கு இங்கிதமே தெரியாது; வேடிக்கை விளையாட்டும் தெரியாது. அவனைப் போன்ற பயல்களைக் காட்டிலும் வெட்டிப் போட்ட மாக்கட்டை எவ்வளவோ மேல்......"

கோபாலன் என் குறிப்பை உணர்ந்து தம் பேச்சை ஆரம்பித்தார். "கேலியாக எதுவும் சொல்லப் போனால் அவனுக்கு அவமானமாக இருக்கிறது. உடனே நாயைப்போல 'வள்' என்று விழ ஆரம்பிக்கிறான். இந்த அழகில் அவன் பெரிய மனிதன் வீட்டுப் பிள்ளையாம்!......"

கதாநாயகர் எங்கள் பேச்சைக் கவனித்தும் கவனிக்காதவர் போல நடந்து கொண்டார். தம் மூத்த மகளை உரக்கக் கூவி அழைத்து, "அதற்குள்ளே என்ன தூக்கம்? ஒரு நாள் இரவு கூட விழித்திருக்க முடியாதா?" என்றார்; அவர் பேசியது பயமுறுத்துவது போல இருந்தது.

கதாநாயகி சிவந்த கண்களைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டாள். பிறகு கதாநாயகருக்குப் பயந்து, விழித்த கண்களை மூடாமலே இருந்தாள்.

'அடடே! இவர் மட்டும் இரவு முழுவதும் விழித்துக் கொண்டிருந்து விடுவாரோ?

பார்ப்போமே சமர்த்தை!' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டேன். எனக்கு அவரைப் பார்த்து, "ஐயா! உம் மகளும் தூங்கட்டும்; நீரும் தூங்கலாம். இங்கே பயம் ஒன்றுமில்லை. ரயிலில் இத்தனை பேர் இருக்க நாங்கள் தப்பாக நடந்து கொள்ள மாட்டோம். இத்தனை பேர் இல்லாவிட்டாலும் நாங்கள் தப்பாக நடந்துகொள்ள மாட்டோம். ஏனென்றால் உம் மகள்மீது எங்களுக்கு எள்ளத்தனை காதல் கூடக் கிடையாது. இப்படிப் பட்ட பெண்களை நாங்கள் காதலிக்கத் தயாராக இருந்திருந்தால் எங்களுக்கு என்றோ கல்யாணம் ஆகியிருக்கும். இதைத்தெரிந்து கொள்ளும்" என்று சொல்ல வேண்டும் என்று ஆசை. ஆனால் சொல்லவில்லை.

ரயில் விருத்தாசலம் வந்து, விருத்தாசலத்தையும் தாண்டி விட்டது. ரயிலில் ஏறக்குறைய எல்லோரும் தூங்கி விட்டார்கள். கோபாலனுக்கும் அரைகுறைத் தூக்கமே. கதாநாயகி தூங்கியதுடன் மட்டுமில்லாமல், ஆடிக் கொண்டும் இருந்தாள். ராஜி என் நண்பரின் தோள்மீது தலை வைத்துத் தூங்கிவிட்டாள். இதைக் கதாநாயகர் தடுக்காததன் காரணம், அவரும் தூங்கி விட்டதுதான். 'ஐயா வீறாப்புப் பேசுகிறாரே, இப்பொழுது என்ன வாயிற்று?' என்று மனதிற்குள் கும்மாளம் போட்டேன். சிறிது நேரத்தில் எப்படியோ விழித்துக் கொண்டார்; 'வந்ததடா மோசம்!' என்று திடுக்கிட்டு எழுந்து ராஜியை நிமிர்த்தி உட்கார வைத்தார். ஆனால் ராஜி



வைத்தியர் :—வாங்க ஜோசியரையா! என்ன சேதி, எங்கே வந்திங்க...

ஜோஸ்யர் :—ஒண்ணு மில்லே சும்மாத்தான் உங்கக் கிட்டே கையைக் காண்பிச்சுட்டுப் போகலாம்னு வந்தேன்......

வாடித் துவளும் செடிபோலப் பழையபடியும் கோபாலன் தோள்மீதே சாய்ந்தாள். கதாநாயகர் எழுந்தார். தம் மேல் துண்டைக் கீழே விரிதது அதில் ராஜியைப் படுக்கப் போட்டார். அப்புறம், கதாநாயகிக்கும் கோபாலனுக்கும் மத்தியில் உண்டான இடைவெளியை எப்படி அடைப்பது என்று வெகுநேரம் யோசனை செய்துவிட்டு, என்னை எழுந்து நிற்கச் சொன்னார். நான் அப்படியே செய்தேன். எனக்குக் கீழே கிடந்த பெட்டிகளில் ஒன்றைத் தூக்கி அந்த இடைவெளியில் வைக்கப் போனார். அந்தப் பெட்டிக்கு இடம் பற்றவில்லை. கதாநாயகியோ, கோபாலனோ யாராவது ஒருவர் தம்

இடத்தைக் காலி செய்தாலொழியப் பெட்டிக்கு அங்கே இடம் இராது என்பது தெளிவாகிவிட்டது. பெட்டியைவிட அதிக அகலமுள்ள கதாநாயகரின் உடம்புக்கும் அந்த இடம் போதாதுதான். அதனால் அவரும் போய் அங்கே உட்கார முடியாது. என்ன செய்வது? கதாநாயகியை எழுப்பி நகர்ந்து உட்காரச் சொன்னார். அவள் நகரும்போது ஒரு அங்குல இடம் காலியானது; ஆனால் நகர்ந்து, உட்கார்ந்தபோது அந்த இடம் அடைபட்டுப் போய்விட்டது. கதாநாயகர் கோபாலனையும் எழுப்பி, நகர்ந்து உட்காரச் சொன்னார். கோபாலனுக்கோ அரையங்குலம் நகருவதற்குக்கூட இடமில்லை. தன்னைத் தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பி, பெட்டியைத் தூக்கி வைப்பது எதற்கு என்று புரியாமல், "ஏன் நகர்ந்து உட்கார வேண்டும்?" என்று கடுஞ்சினத்துடன் கேட்டார் கோபாலன்.

"பெட்டியை அப்படி வைத்துவிடுவோம்."

"வைக்காவிட்டால் என்ன?"

"அதை உங்களுக்கு விளக்க வேண்டிய அவசியமில்லை."

"நான் நகர்ந்து உட்காரவேண்டிய அவசியமும் இல்லை"

"அவசியம் இல்லையா?"

"என்ன ஐயா, மிரட்டுகிறீர்? நகருவதற்கு இடம் எங்கே இருக்கிறது?"

"பெண்களுக்குக் கௌரவம் கொடுக்க வேண்டும். போக்கிரித்தனமாக நடந்து கொள்ளக் கூடாது.."

கோபாலன் கோபம் பொறுக்காமல் நிமிர்ந்து உட்கார்ந்து, "வாயை மூடு ஐயா! எனக்கும் உம் மகளுக்கும் நடுவில் ஒரு முழம் காலியாக இருக்கிறது. நான் மரப் பலகையில் உட்கார்ந்திருப்பதால் மின்சாரம் என் உடம்பிலிருந்து அங்கே பாய்ந்துவிடாது. தெரிந்ததா?" என்று கத்தினார்.

வண்டியிலிருப்பவர்கள் சமாதானம் செய்ய முயன்றார்கள். பொது இடங்களில் பெண் கட்சியில்தான் ஆள்சேரும் என்ற தைரியத்துடன் கதாநாயகர் தம் கை வரிசையைக் காட்ட ஆரம்பித்துவிட்டார்.

"அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசக்கூடாது" என்று எச்சரித்தார் கதாநாயகர்.

பக்கத்திலிருப்பவர்கள் கோபாலனையும் கதாநாயகரையும் இடம் மாற்றி அமரச் சொன்னார்கள். நானும் அதை ஆமோதிக்கவே கோபாலன் ஒப்புக் கொண்டார்.

வண்டி ஓடிக்கொண்டிருந்தது. எல்லோருக்கும் மட்டுக்கு மிஞ்சிய தூக்கம். அதனால் அரை மணி நேரத்தில் பழையபடியும் தூங்கிவிட்டார்கள். கதாநாயகரும் தூங்கிவிட்டார். கலவரம் நடந்த ஞாபகமே அந்த இடத்தில் இல்லை. விருத்தாசலத்துக்கும் திரிச்சிராப்பள்ளிக்கும் நடுவே பாதி தூரத்தில் ரயில் வந்து கொண்டிருந்தது. கதாநாயகி, கதாநாயகிக்குரிய முக்கியமான பங்கை நிறைவேற்ற முற்பட்டாள். அப்பொழுது நான் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன். நான் கொஞ்சம்கூட எதிர்பாராதவாறு கதாநாயகி என் மீது 'தொப்' பென்று விழுந்

தாள். நான் மட்டும் கை கொடுத்துத் தாங்கியிராவிட்டால் பெஞ்சின்மீது முட்டிக் கதாநாயகிக்கு ஏதேனும் அபாயம் நேரிட்டிருக்கும். அவளைக் கையினால் தாங்கி மேலே தூக்கினேன். இந்தச் சந்தடியில் அங்கு உட்காந்திருந்த பாதிப்பேர் விழித்துவிட்டார்கள். கதாநாயகரும் விழித்தெழுந்தார்.

அவள் உறக்கத்தில் குப்புற விழுந்து விட்டாள் என்று நான் சொல்லியும் அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. வாய்க்கு வந்தபடி என்னை அயோக்கியன் என்றும் போக்கிரி என்றும் சொன்னார். உண்மையை நான் எடுத்துச் சொல்லியும் அவர் கேட்காமல் மேலும் மேலும் திட்டிக் கொண்டே இருந்தார். பக்கத்தில் இருந்தவர்களும் என் சட்சியை ஆதரித்தார்கள். பெண்களிடத்திலே அயோக்கியத் தனமாக நடந்து கொள்ளும் தடியன் என்று க. நா. என்னைத் திட்டினார். உடனே கோபாலன் 'ரௌடி'க் கோலத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டார். கொச்சை வார்த்தைகளினால் திட்டிக் கொண்டே கதாநாயகரை அடிப்பதற்கு எழுந்தார். ரயிலில் உள்ளவர்கள் நடுவே பாய்ந்திராவிட்டால் கதாநாயகர் சோக நாடகத்தின் கதாநாயகராகி யிருப்பார். நல்ல வேளையாக அப்படி ஒன்றும் நடந்து விடாமல் தடுத்து விட்டார்கள். ஆனால் பரஸ்பரம் திட்டிக் கொண்டிருந்தார்கள். "சமையாத பெண்ணுக்கு இந்தப் பாடு என்றால் சமைந்த பெண்ணுக்கு எந்தப் பாடு!" என்றும் கோபாலன் சொன்னார். நானும் சும்மா இருக்கவில்லை. கதாநாயகரைப் பார்த்து, "உம் பெண் மீது துளிக்கூட எங்களுக்கு மோகம் கிடையாது. அதனால் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டோம். அவளிடம் ஒழுக்கக் கேடாக நடப்போம் என்றும் எதிர்பார்க்க வேண்டாம். அவள் வயது வராத சிறு பெண். எங்களைப் பொறுத்த மட்டிலும் அவள் நேற்றுப் பிறந்த பெண்ணுக்குச் சமம்தான். இப்பொழுதாவது புரிந்ததா? இனிமேல் வாலாட்டினால் ஒட்ட அறுத்து விடுவேன். ஜாக்கிரதை!" என்று ஒரு போடு போட்டு விட்டு உட்கார்ந்தேன்.

சண்டை வலுக்க ஆரம்பித்தது. அங்கிருந்தவர்களில் எங்களைவிடப் பலசாலிகள் சிலர் இருந்ததால், தம் பலத்தை எல்லாம் பிரயோகித்து எங்கள் சண்டையை நிறுத்தி விட்டார்கள். அவர்களைத் தள்ளிவிட்டுக் கை வரிசையைக் காட்ட எங்கள் உடம்பில் பலமில்லை. கை பயனற்றுப் போகவே இருசாராரும் சிறிது நேரம் வாய் பலத்தைமட்டும் உபயோகித்துக் கொண்டோம்.

அப்படி இப்படி என்று வண்டி திருச்சிராப்பள்ளிக்கு வந்துவிட்டது; கதாநாயகரும் தம் புதல்விகள் சகிதமாக வண்டியைவிட்டு இறங்கினார். எங்களை அடிப்பதற்குக் கையாட்கள் தயார்பண்ணிக்கொண்டு வரப்போகிறவர் போல வேகமாகவும், செருப்புச் சத்தம் காதைப் பிளக்கும்படியாகவும் நடந்து சென்றார். அவர் அப்புறப்பட்டது உடம்பில் ஒட்டிய சேற்றைக் கழுவிவிட்டது போல் இருந்தது எனக்கு. எங்க

ளுடன் வந்த சில பிரயாணிகளும் இறங்கிவிட்டார்கள். திருச்சிராப்பள்ளியைவிட்டு வண்டி புறப்பட்ட மறு நிமிஷத்தில், நான் இந்தக் கதாநாயகரைப் பற்றிக் கேவலமாய்ப் பேச வேண்டும் என்று விரும்பிப் பேச்சை ஆரம்பித்தேன்.

கோபாலன் சொன்னார்; "இந்தப் பயல் ஒரு தகப்பன் தானா? மகள் சும்மா இருக்கிறாள், நாமும் சும்மா இருக்கிறோம். இந்த இருவருக்கும் நடுவில் ஆபாசமான முடிச்சைப் போடுகிறானே இந்த ஆபாசக்களஞ்சியம்! நான் சத்தியமாகச் சொல்லுகிறேன், எனக்கு அப்படிப்பட்ட எண்ணமே தோன்றவில்லை. ஆனால் இவன் மேலும் மேலும் அதை ஞாபகப்படுத்திக் கொண்டு வரவே, நான் மனதில் பல விஷயங்களைக் கற்பனை பண்ணிப் பார்க்கும்படி ஆய்விட்டது."

"என்ன விஷயங்களை?"

"அதை வெளியே சொல்ல முடியாது. இத்தனை ஆபாசத்துக்கும் காரணம் இந்த ஆபாசக் களஞ்சியம்தான். தகப்பனுக்கு மகளைப் பார்த்தால் மகளைப் போலக் காட்சியளிப்பாளா காமக் கருவியாகக் காட்சியளிப்பாளா? இதெல்லாம் காலத்தின் கோலம் ஐயா!" என்று சொல்லிவிட்டுக் கோபாலன் சிரித்தார்.

கதாநாயகரை இரண்டு அடியாவது அடித்திருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. இவன் தகப்பனா? இவள் மகளா? ராஜியைக் கூட அவன் அப்படித் தானே நினைத்திருக்கிறான்! இல்லை என்றால் என் நண்பரின் சட்டை அவள் மீது உரசியதற்காக அப்படித் துள்ளிவிழுவானா? கோபாலனைப் பார்த்து நான் சொன்னேன்: "இவனைப்போலக் கீழ்த்தரமான பயலைவிட நம் மகாதேவன் பயல் எத்தனையோ மடங்கு உயர்ந்தவன்."

"அவன் தங்கம் அல்லவா? தக்கவயதுள்ள ஒரு பெண்ணை அவன்காதலித்தான். அதில் தப்பு ஏதாவது உண்டோ? அவள் அந்நியப் பெண். பெற்ற மகளல்ல! கல்யாணம் செய்துகொள்ளும் தகுதியுடைய ஒரு பெண்தான் அவள். அவனுக்கு அவள் காமக் கருவியாகத் தோன்றியிருந்தாலும் கூடக் குற்றமில்லை என்று சொல்லுவேன். ஆனால் தகப்பனுக்கு மகள் அப்படித் தோன்றலாமா......"

கோபாலன் தம் பேச்சை முடிக்கு முன்பே நான் சொன்னேன்: "கோபாலன்! அந்தப் பேச்சை விடுங்கள். ஆரஞ்சுப் பழத்தை எடுங்கள், சாப்பிடலாம்."

புதிய நூல்

கொடி முல்லை

வாணிதாசன் எழுதிய தமிழ்க்காவியம்

விலை அணா 12

தபால் செலவு தனி

எங்கள் புத்தக விலைப்பட்டியலை எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்

"பொன்னி"

சென்னை 21

பொது மேடை

அதிசயம்

மலர் கிடைத்தது; மகிழ்ச்சி— மகிழ்ச்சி மட்டும் அல்ல; வியப்பும்கூட!

இரண்டு வாரங்களுக்கு முன்னுல் தங்களை நான் சந்தித்த போது அங்கே மலரின் வாடையே வீசவில்லை. அதற்குள் எப்படியோ ஓர் அற்புதமான மலரைத் தயாரித்து வெளியிட்டு விட்டீர்கள்!

இதற்குக்காரணம் தாங்களாயிருப்பீர்கள் என்று என்னுல் நம்பவே முடியவில்லை. உங்களுடைய கையில் அலாவுத்தீனின் அதிசயத் தீபம் தான் சிக்கியிருக்க வேண்டும்—அப்படித் தானே?

சென்னை
17-1-51 } விந்தன்

*

நல்ல விருந்து

...பலவகையான நல்ல பொருள்களைத் திரட்டியிருக்கிறீர்கள். தமிழ்ப் பெருமகனுன திரு. வி. க. அவர்களின் பேட்டி உயரிய ஒன்று. கதைகளும், கவிதை, கட்டுரைகளும் சுவை நிறைந்திருக்கின்றன. வண்ணப் படங்கள் கண்களுக்கும் சிந்தனைக்கும் நல்ல விருந்து...

திருச்சி
17–1–51 } அகிலன்

*

மாட்டுப் பொங்கல்

'பொன்னி' மலர் கிடைக்கப் பெற்றேன். குறைந்த விலையில் நிறைந்த கருத்தோவியங்களைப் 'பொன்னி' யால் தான் தர இயலும் என்று கருதுகிறேன். 'மாட்டுப் பொங்கல் எப்போ அண்ணே?' என்ற ரெஸாக்கின் மூவர்ணச்சித்திரம்' என் இதயத்தை வெகுவாகக் கவர்ந்தது.

சென்னை
17-1-51 } ஜெகசிற்பியன்

*

தமிழாக்கம்

...'பொன்னி' மலரைக் காணுகின்ற எவரும் இதனை நடத்துவோர் தமிழாக்கத்தின் உண்மையான பிரதிநிதிகள் என்பதை அறிவர்...

புதுவை
22-1-51 } விசு. திருநாவுக்கரசு

*

அபாரம்

...மலரைப் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது எனக்கு. ஒரு ரூபாய் விலைக்கா இவ்வளவும்? ஓவியங்களே நல்ல காவியம் போலக் காட்சியளித்தன. நண்பர் 'ரெஸாக்' கின் 'மாட்டுப் பொங்கல்' படத்தை ஒவ்வொரு மனித உள்ளமும் நிச்சயம் பாராட்டியே தீரும். மிகவும் அபாரம் போங்கள்...

புதுவை
22-1-51 } இளமைப்பித்தன்

*

நிறைந்த மணம்

குறைந்த விலை, நிறைந்த மணம்'' —பட்டணம் பொடி விளம்பரமல்ல! "பொன்னி" பொங்கல் மலருக்கு நான் அளிக்கும் பாராட்டு இது.

மதுரை
19-1-51 } முகம்மது ஷரீப்

மட்டற்ற மகிழ்ச்சி

இவ்வாண்டு 'பொங்கல் மலர்' வழவழப்பாக அமையாவிடினும் அதன் வளத்திலும் வனப்பிலும் குறைவில்லை! ஓவியங்கள் ஒரு சிலவே எனினும் ஒப்பற்றவை! மலரின் வாயிலாக 'எது சேவை' 'எது அறிவு' என்றறியும்போது என் 'மகிழ்ச்சி என்னே' சொல்வேன்! 'தமிழ் வளர்ச்சி'யும் 'தமிழர் போர் முறை'யும் 'தமிழ்த் தென்றல் திரு. வி. க. பேட்டி'யும் மலருக்கு மாண்பளிக்கும் முறையிலே அமைந்தது மிக 'நல்ல பொருத்தம்' என்று என்னுள்ளம் எடுத்தியம்புகிறது. 'பாவமும் சாபமும்' பற்றிய என் 'நினைவுகள்' 'நிலாக்கதிர்' ஒளிவிட 'புத்தாண்டின் சிந்தனை'யைத் தூண்டி 'மனிதர்கள்' வாழக் 'கடல் முத்துக்கள்' போன்ற கருத்துக்களைக் கவிதைத் தேனில் கலந்தளிக்கும் 'புரட்சிக் கவிஞர்' அவர்களையும், தமையனுக்காகத் 'துறவி' யாகிச் சிலம்பின் பெருமை காட்டும் சிலப்பதிகாரம் தந்த 'இளங்கோ'வையும் உளமாரப் போற்றச் செய்து 'பிறவிக்கடல்' தாண்டிப் 'புதிய வேதம்' கண்டு 'காதற் சோலை'யில் உலவிய களிப்பால் இனிய 'லாலிலாலி' பாடச் செய்தன. மகிழ்ச்சி மட்டற்று விளங்கிற்று...

அன் செட்டி
20-1-51 } க. கூடலரசன்

*

கருத்துக் குவியல்

தமிழ் நாடு கண்டிராத, கருத்துக் குவியல் செறிந்த நல்ல மலரைக் குறைந்த விலையிலும் தர முடியும் என்பதைப் 'பொன்னி' பொங்கல் மலர் இவ்வாண்டு முரசறைகிறது...

சிதம்பரம்
17.1-51 } தில்லை அறிவழகன்

*

புது மெருகு

...புத்தரைப் பற்றி நா. பாண்டுரங்கனும் அகலிகை பற்றி டி. கே. சீனிவாசனும் எழுப்பியிருக்கும் புதுமெருகு அப்படியே உள்ளத்தை ஊடுருவிப் பாய்கிறது. 'சுகி'யின் நிலாக்கதிர் ஒரு உல்லாச யாத்திரை. ஜெக சிற்பியனின் இனிய சிந்தனை ஓட்டமும், ரகுநாதனின் புது வேதமும் காலக் கண்ணுடியின் பிரதி பிம்பங்கள். குருடனின் காதலியை லாகவமாகக் காட்டுகிறார் அகிலன்...

இராசை
21-1-51 } தனுஷ்கோடி

*

தித்திக்கும் முத்தமிழ்

தித்திக்கும் முத்தமிழின் சுவையைப் பிழிந்தெடுத்துப் 'பொன்னி' 'பொங்கல் மலராக வழங்கி விட்டீர்கள். பாராட்டுகிறேன். 'அவாள், இவாள், ஸ்பஷ்டம், பாஷை' என்றெல்லாம் எழுதி 'இது தான் தமிழ்' என்று கூறும் கொலைஞர் கூட்டம் தனித்தமிழ் மணக்கும் தங்கள் மலரைக்கண்டால் வெட்கித் தலைகுனியும்—நிச்சயம்

மைசூர்
22-1-51 } இரா. சேவியர்

*

வெற்றி

மலர் பொங்கல் மறு நாள் பார்த்தேன். அடடா! எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? நான் நம்பவேயில்லையே! எல்லா ஆண்

டையும்விட இந்த ஆண்டுதான் உண்மையிலேயே மலர் வெற்றி பெற்றிருக்கிறதென்றுசொல்லுவேன். மலர் வாங்கியவர்கள் அனைவரும் மகிழ்ச்சியான வாசகங்களையே தெரிவித்தனர். ஒரு ரூபாய்க்கு எப்படி இவ்வளவு அபூர்வமாகத் தயாரிக்க முடிந்தது! இந்த வருடம் வந்த எல்லா மலர்களினும் இதுவே சிறப்புடையதாக இருந்தது.

அண்ணாமலைநகர் 17–1–51 } மு. அண்ணாமலை

*

எதிர்பாராதது

பொங்கற் புதுநாளிலே 'பொன்னி'யும் பூரிப்போடு 'தடித்துப்' பொங்கி வந்திருக்கிறாள்... வசதிகள் அதிகமாகவும் எளிதாகவும் கிடைக்கும் சென்னையிலிருந்து வரும் பத்திரிகைகளின் மலர்கள் யாவற்றையும் போலப் புது மனைபுகுந்த 'பொன்னி'யும் மிடுக்குடன் புதுமையாக இவ்வளவு குறைந்த விலையில் உலவ வருவாள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை! ஏன்? யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது...

கோவில்பட்டி 15–1–51 } சுப. சந்திரசேகரன்

*

மாத மொன்று

...வருடம் ஒரு மலரல்ல, மாதம் ஒன்று வெளியிட்டாலென்ன என்று கேட்கும்படி தூண்டுகிறது தங்கள் மலர். கடைசியாக மலரின் பெறுமதி ஒரு ரூபாய்தானா எனத் தங்களைக் கண்டனத்துடன் கேட்க விரும்புகிறேன்.

அச்சுவேலி இலங்கை, 27–1–51 } சி. செல்லத்துரை

பாலனும் யானையும்

கலைமணி

மைசூரில் பாலன் என்றொரு சிறுவன் இருந்தான். அவன் இயற்கையிலேயே நல்ல குணம் வாய்ந்தவன். ஆனால் சில கெட்ட நண்பர்களோடு சேர்ந்துகொண்டு திருடும் தொழிலில் ஈடுபட்டான். இதை அவன் தாய் அறிந்தபோது மிகவும் வருத்தப்பட்டுப் புத்திமதிகளைக் கூறித் திருந்துமாறு கூறினாள். ஆனால் பாலன் தாயின் புத்திமதியை மதியாது நடந்துவந்தான்.

முதலில் சிறுசிறு திருட்டுக்களில் ஈடுபட்டுவந்த பாலன் பின்னால் பெரும் திருட்டுகளிலும் ஈடுபடத் தொடங்கினான். ஊரில் அவனைக் கொள்ளைக்காரன் என்று கூறி இகழ்ந்தனர்.

இது அரசர் காதுக்கு எட்டியபோது அவர் தன் சேவகர்களைக் கூப்பிட்டு அந்தப் பெரும் கொள்ளைக்காரனைப் பிடித்து வருமாறு கட்டளையிட்டார்.

இதையறிந்த பாலன் வருத்தப்பட்டான். தான் சேவகர்கள் கையில் அகப்பட்டால் கடுமையான தண்டனை கிடைக்குமே என்று பயந்தான். ஆகவே இரவோடிரவாகக் கிளம்பிக் காட்டுக்குள் ஓடிப் பதுங்கிக்கொண்டான்.

காட்டில் சாப்பாடோ, தின்பண்டங்களோ எங்கிருந்து கிடைக்கும்! பாலன் பழம், காய், கிழங்கு இவற்றையே சாப்பிடவேண்டியிருந்தது. அப்போதுதான் தன் தாய் தனக்குக் கூறிய புத்திமதிகளையும், தான் அதை அலட்சியம் செய்ததையும் நினைத்து வருந்தினான்.

ஒரு நாள் பாலன், காட்டில் ஒரு யானை கோரமாகக் கூச்சலிட்டு அழுவதைக் கண்டான். நெருங்கிப் பார்த்தபோது அந்தயானையின் துதிக்கை முனையில் ஒரு அம்பு தைத்திருப்பதைக் கண்டான். உடனே தைரியமாக அருகில் சென்று அம்பைப் பிடுங்கி அதன் வலி போகுமாறு சிகிச்சை செய்தான். யானை அவன் அன்புக்கு

மகிழ்ந்து தன் துதிக்கையை ஆட்டித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தது.



பின் சில நாளைக்கெல்லாம் பாலன் அரசாங்க வீரர்களால் பிடிக்கப்பட்டு அரசன்முன் கொண்டுவரப்பட்டான். சிலநாள் விசாரணை நடந்து முடிவில் அவனை யானைக் காலில் இடறும்படி அரசன் தண்டனை விதித்தான்.

குறிப்பிட்ட நாளில் பாலன் இடுப்புவரைக்கும் புதைக்கப்பட்டுத் தண்டனைக்குத் தயாராக்கப்பட்டான். தூரத்தே யிருந்துகொண்டு யானைப்பாகன் யானையைக் கோபமாக ஏவிவிட்டான். யானை வெகு வேகமாகத் துதிக்கையை ஆட்டிக்கொண்டு அவனைத் தன் காலால் மிதித்துக் கொல்ல வந்தது. பாலனோ பயந்து நடுநடுங்கி கண்களை இறுக மூடிக்கொண்டான்.

இதற்குள் வேகமாக வந்த யானை அவன் முகத்தை அருகில் வந்து பார்த்துவிட்டுத் தன் துதிக்கையால் அவன் இடுப்பைச் சுற்றி வளைத்துக் குழியிலிருந்து வெளியே இழுத்துத் தன் முதுகின் மீது வைத்துக்கொண்டு கூத்தாடியது. இதைப் பார்த்ததும் அரசன்முதல் யாவருக்கும் ஆச்சரியமாகப் போய்விட்டது.

காட்டில் அவனால் அன்பு காட்டப்பட்ட யானைதான் அது. எனவேதான் பாலன் உயிர் பிழைத்தான். பாலன் குற்றவாளியானாலும் அன்புடையவனாக இருந்ததால் சமயத்தில் காப்பாற்றப்பட்டான். ஆகவே நாம் குற்றம் செய்யாது இருப்பதோடு அன்புடையராகவும் இருக்க வேண்டும்.



தமிழ் விருந்து

மு. அண்ணாமலை

1. மருளும் மீன்

ஒரு பாணன் தன் யாழை மிழற்றி அழகான செந்தமிழ்ப் பாட்டொன்று பாடிக்கொண்டு வந்தான். வீட்டு வாயிற்படியில் நின்றுகொண்டிருந்த பெண் அந்த இசையின்பத்தைப் பருகிக் கொண்டிருந்தாள். அவள் வீட்டிற்குள் வந்தாள். அந்தப் பெண் அங்கிருந்த மற்றொரு பெண்ணிடம் போய், "இந்தப் பாணன் பாடுவதைக் கேட்கலாம், வா" என்று சொல்லிக் கூப்பிட்டாள். அவள் வருத்தமாக உட்கார்ந்துகொண்டிருந்தாள். கன்னத்தில் கையை வைத்த வண்ணம், ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். தன்னைத் தன் தோழி இன்னிசை கேட்க அழைக்கிறாள் என்பதை அவள் உணரவில்லை. மீண்டும் தோழி அவளை நோக்கி, "இந்தப் பாணன் எத்துணை நன்றாகப் பாடுகிறான், வந்து கேட்க மாட்டாயா?"

"யாரது?...பாணனா?" என்றாள் தலையைத் தூக்கியபடி.

"ஆம்" என்றாள் தோழி.

"உடனே வெளியே விரட்டிக் கதவை மூடு" என்று படபடவென்று வெடி வெடித்தது போல் சொன்னாள் அவள்.

"ஓகோ! நீ நினைக்கிற அந்தப் பாணனில்லை. இவன் வேறு ஆள்" என்றாள் தோழி.

"எந்தப் பாணனாயிருந்தாலும் சரி. வெளியே போகச் சொல்" என்று சொல்லிவிட்டாள்.

"பாணர்களே பொய்யர்கள் ...ஏமாற்றிப் பிழைப்பதுதான் அவர்கள் வேலை" என்றும் முணுமுணுத்துக்கொண்டாள்.

அந்தப் பெண் சிலநாளாக வருந்திக் கிடந்தாள். அவளது கணவன் யாரோ ஒரு பரத்தையோடு நட்புக்கொண்டிருந்தான் என்று கேள்விப்பட்டதுதான் அதற்குக் காரணம். அவளுடைய தலைவன் காலங் கடந்து வீடு வருவான். வீட்டில் ஏதாவது பொய் சொல்லிச் சரிக்கட்டி விடுவான்.

அந்த வீட்டிற்கு வழக்கமாக வந்து பாடிப் பொருள் பெற்றுச் செல்லும் பாணன் ஒருவன் உண்டு. அவனிடம் தலைவி தன் தலைவனைப்பற்றிய செய்திகளை அறிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்தாள். எப்பொழுதும் கொடுப்பதைவிட அன்று அதிகமாகவே நெல் கொடுத்தாள். அந்தப் பாணன் தன் தலைவனுக்கு மிக வேண்டியவன் என்பது அவளுக்குத் தெரியாது. அந்தப் பாணனையே கையாளாக வைத்துக் கொண்டு அந்தத் தலைவன் பரத்தையர் வீடுகளுக்குச் செல்லுவது முண்டு. அப்படிப்பட்ட பாணன் அவளுக்கு எப்படி உண்மையைச் சொல்லுவான்?

மறுநாள் காலையில் தலைவியிடம், "உங்கள்கணவர் வாணிப

நிமித்தமாகச் சிலருடன் பேசிக் கொண்டிருந்தாரே தவிர நீங்கள் நினைப்பதுபோல் அப்படி வேறு யாருடனும் பேசிக் கொண்டிருக்க வில்லையே. வீணுகை அவர் மீது ஐயுற வேண்டாம். அவர் மிக நல்லவராயிற்றே'' என்று அவருக்காகப் பரிந்து பேசினுன். இப்படி ஒவ்வொரு நாளும் ஏதாவது அடுக்கடுக்காகப் புளுகிக் கொண்டே இருந்தான் அந்தப் பாணன்.

அந்தப் பாணனுக்குத் தலைவனைப் பற்றி நன்ருகத் தெரியும். எந்தப் பரத்தையின் வீட்டில் தலைவன் கொஞ்சிக் குலவிக் கொண்டிருப்பான் என்பதை அவன் நன்ருக அறிவான். அந்தத் தலைவனும் பரத்தையும் அருகருக மர்ந்திருக்கையில் இவன் இன்னிசைபாடி எத்துணையோ முறை மகிழ்வித்திருக்கிருன்.

தலைவிக்கு நாளடைவில் இவ்விஷயம் விளங்கிவிட்டது. பாணன் பொய் சொல்லுகிருன் என்பதும் போதாதற்குக் கையாளாகவும் இருக்கிருன் என்பதும் தெரிந்துவிட்டன. அவளுக்குச் சொல்ல முடியாத கோபம் வந்து விட்டது. அவளுடைய தலைவன் மேல்கூட அவ்வளவு கோபமில்லை. பொய் சொன்னுனே, அந்தப் பாணன் அவன்மேல் தான் அவளுக்கு அளவு கடந்த கோபம்! அந்தப் பாணன் ஒரு நாள் வாசற்படி ஏறும்போது அவள் தட தடாவென்றுபோய்க் கதவைப் 'படீர்' என்று பலத்த சப்தத்தோடு சாற்றித் தாழ்ப்பாள் போட்டுவிட்டு வந்தாள்.

இந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் தொடர்ந்து கவனித்த தோழிக்குத் தலைவியின் உள்ள நிலை நன்ருகப் புரிந்தது.

தலைவனைக் கண்ட தோழி இந்த நிலையை அழகாக அவனிடம் எடுத்துச் சொல்லுகிருள்.

குருகுகொளக் குளித்த
கெண்டை அயலது
உருகெழு தாமரை
வான்முகை வெரூஉம்
கழனியெம் படப்பைக்
காஞ்சி ஊர!
ஒருநின் பாணன்
பொய்ய னுக
உள்ள பாண ரெல்லாம்
கள்வர் போல்வர்
நீ அகன்றிசி னேர்க்கே!

—குறுந்தொகை

"காஞ்சி ஊரனே! உன்னுடைய ஒரு பாணன் பொய்யனுக இருப்பதால், உன்னுடைய மனைவிக்கும் அவளைச் சேர்ந்த சுற்றத்தார்க்கும் உள்ள பாணரெல்லாம் கள்வர்கள் போலத் தோற்றுகின்ருர்களே!

"ஒரு தொழிலாளனின் பிழை அந்தத் தொழில் இனத்திற்கே போய்ச் சேருகிறதே! பொதுவாக அதுதானே உலக இயற்கையாகவும் இருக்கிறது!"

அந்தத் தோழி தலைமகனை அழைக்கும்போது, அவனுடைய நாட்டின் வயற்புறங்களைப் பற்றி விரிவுபடுத்திப் பேசுகிறாள். அந்த விரிவிலே கவிதைச் சுவை வெற்றி நிலை அடைந்திருக்கிறது.

அந்தத் தலைவனது நீர்வளமுள்ள நாட்டிலே ஒரு மீன்—அந்த மீன் ஒரு நாள் ஒரு கொக்கின் கூரிய வாயிலே அகப்பட்டுக் கொண்டது. ஆனால் நல்ல வேளையாகத் தப்பி விட்டது.

உடம்பெல்லாம் அதற்கு ஒரே வலி! அந்தக் கொடிய வேதனையை நினைத்தாலே அதனைத் திடீரென்று ஓர் அச்சம் வந்துதாக்கும். அந்தமீன் எதைக் கண்டாலும் கொக்கைப் போலவும் கொக்கின் வாயைப் போலவும் நினைத்துக் கொண்டு, பயந்து கீழே ஓடிப் பதுங்கிக் கொள்ளும்.

சில வெண் தாமரை மொட்டுக்கள் நீரை நோக்கிக் கவிழ்ந்திருப்பதைப் பார்த்தால் ஏறக்குறையக் கொக்கு நின்றிருப்பது போலவே இருக்கும். இப்படிப்பட்ட தாமரை அரும்புகளைப் பார்க்குந்தோறும் பயந்து பயந்து கீழே ஒளிந்து கொள்ளுகிற கெண்டை மீனைப் போலத் தானே அந்தத் தலைவியும் இருக்கிறாள்.

"குருகு கொளக் குளித்த கெண்டை
அயலது
உருகெழு தாமரை வான்முகை
வெரூஉம்
கழனியெம் படப்பைக் காஞ்சி
ஊர!"

என்ற வரிகளை மீண்டும் மீண்டும் படித்துப் பார்க்கலாம். "கொக்கின் வாயிலிருந்து தப்பிப் பிழைத்த கெண்டை மீன் தன் உருவாலும் நிறத்தாலும் கொக்கை ஒத்திருக்கும் பெரிய தாமரை மொட்டைக் கண்டு பயப்படும்படியான வயல் நாட்டை உடைய காஞ்சியூரனே" என்று அழைக்கின்ற அந்தத் தோழி தலைவியின் குணத்தை எவ்வளவு அழகாகத் தலைவனுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறாள்!

தீமை செய்யாத தாமரை மொட்டுக்களை யெல்லாம் அந்த மீன் கொக்கென்று நினைத்துக் கொண்டு பயப்படுவதுபோல் அந்தத் தலைவி நல்ல பாணர்களை யெல்லாம் கள்வர் போலவே நினைக்கிறாள்; பயப்படுகிறாள்.

அந்தப் 'பயங்கொள்ளி' மீனுக்கும் இந்த "அப்பாவி"த் தலைவிக்கும் பண்பிலே எவ்வளவு பொருத்தம்!

தோழி அந்தத் தலைவனுக்கு இந்தக் கவிதையின் மூலம் அவனது தீய ஒழுக்கத்தையும் உணர்த்துகிறாள். தலைவன் தன் மனைவியினிடத்தில் நடந்து கொள்ளும் நன்னெறியைவிட்டுத் தப்பிவிட்டான். அவளை நோகச் செய்தான். இவற்றை அப்படியே படபடவென்று கூறி விடலாமா?

"நின் பாணன் பொய்யன்" என்று கூறும்போது "நீ பொய்யன்" என்பதை ஒலிக் குறிப்பால் ஊட்டிவிடுகிறாள். பாணனைப் பொய்யனாக ஆக்கியது யார்? அவன் சாதாரணமான—ஏதோ பாடி வயிறு பிழைக்கிற—இசை விற்பனன் தானே! தலைவனுக்காகத்தானே அவன் தலைவியிடம் ஏதேதோ கூறுகிறான்.

இது போன்று சில தலைவர்கள் பொய்யர்களாக இருக்க ஆணினமே நம்பப்படாமல் போகிறதல்லவா? ஆண்களின் ஆசை வார்த்தைகள் நிலைபே

ருனவை என்று பெண்ணினம் எப்படி நம்பக் கூடும்?

பாணன் பொய்யன்; பாணனைக் கையாளாக வைத்துக் கொண்டு அவனைப் பொய்யனாக்கிய தலைவன் ஒரு பெரும் பொய்யன். தலைவிக்கு அவன் இழைத்திருக்கும் அநீதியினால்ஒன்றுமறியாத ஏழைப்பாணர்களெல்லாம் அவள் கருத்துக்குப் பொய்யர்களாகவே தோற்றுகிறார்கள். அத்துணை மனத்தளர்ச்சி அடைந்து விட்டிருக்கிறாள் தலைவி.

இவ்வளவையும் தன் மனத்தே வைத்துக் கொண்டிருக்கும் தோழி மிகஅழகாகவே தலைவனிடம்பேசியிருக்கிறாள்.சங்ககாலத் தோழிகளின் பேச்சுத் திறத்தைச் சொல்லவா வேண்டும்?

இந்தச் சிறு பாடலைப் பாடியவர் ஓரம் போகியார் என்னும் கவிஞராவர். இவர் இன்னும் பல அகத்துறை சார்ந்த (மருதத் திணைக்குரிய) பாடல்களைப்பாடியிருக்கிறார்.

பாடலில் அகன்றிசினோர்க்கே என்று பன்மையால் கூறியிருக்கிறார். அதாவது தலைவனை அகன்று தனித்திருக்கும் தலைவியையும், அவளது நன்மை தீமைகளை ஒக்க இருந்து உள்ளத்தால் வருந்தியும் மகிழுங்கால் மகிழ்ந்தும் பங்கு கொள்ளுகிற சுற்றத்தையும் குறித்ததாம். இச்சொல்லுக்கு உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் பொருள் எழுதும்போது,"நீ அகன்றிசினோர்க்கே" என்றது 'நீ பல மகளிரோடு நட்புடையாய்'என்னும்கருத்தை உள்ளடக்கியது' என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு கூறுவதைவிடத் தலைவியும் தலைவியைச் சார்ந்தவர்களும் என்று கொள்வதில்தான் உணர்வும் கவிதைச் சுவையும் கெடாதிருக்கின்றன.

புதிய நூல்கள் வெளிவந்துவிட்டன

வேகமும் விறுவிறுப்பும் நிறைந்த
நடையில் படிக்கப் படிக்கத்
தெவிட்டாத கற்பனைச் சித்திரங்கள்.

1. கருப்பு முல்லை
(ஜெகசிற்பியன்) 0 10
2. காதலோ காதல்
(அச்சில்) தணலன் 0 8
3. சாவின் முத்தம்
(ஜெகசிற்பியன்) 1 0

சிறுவர்களுக்கோர் சிறந்த புத்தகம்

வீரபாண்டியன் (அச்சில்)
(நீலமேகன்) 0 3

விற்பனையாளர் கழிவு 25%
செலவு இனம்

விபரங்கட்கு ;

கோவை பாரி நிலையம்
12/205, ஒப்பணக்கார வீதி
கோயமுத்தூர்

டாக்டர் டம்பாச்சாரி

இளமைப்பித்தன்

காலை நேரம். வழக்கம் போலவே, கீழ்த்திசையில் சூரியோதயம் ஆயிற்று. லேசாக மிதந்து கொண்டிருந்த ஒரு சிறு மேகக் கூட்டத்தின் இடுக்கில் புகுந்து பரபரவென்று ஓடிப் போய்ப் பூமியைத் தொட்டது ஓர் ஒளிக்கதிர்.

கிழக்கு முகமாக நிமிர்ந்து நிற்கும் ஒரு நாகரிகமான கட்டிடம்; அதைச் சுற்றிலும் புது மோஸ்தரில் வளைவு போட்டு எழுப்பியிருக்கும் காம்பவுண்டுச் சுவர்; நுழை வாயிலில், பாலிஷ் போட்டுப் பளிச்சென்று மின்னும் 'டாக்டர், டம்பாச்சாரி' என்ற பித்தளைத்தகடு; 'ஷெட்'டுக்குள்ளிருந்து பாதிவரையில் 'பிதுங்கி' நிற்கும் புது மாடல் கார். வெயில் ஏறிக்கொண்டிருப்பதைப் போலவே கூட்டமும் ஏறிக் கொண்டு வர ஆரம்பித்தது அந்த இடத்தில்! சுமார், பத்து ஆண்டுகளுக்கு முன்பு இந்த இடத்தைப் பார்த்தவர்களில் பாதிப்பேர் இப்பொழுது இல்லை யென்றுதான் சொல்லவேண்டும்.

டாக்டர், 'டம்பாச்சாரி' இருபது, இருபத்தைந்து ஆண்டுகளாகப் 'பிராக்டிஸ்' செய்து கொண்டு வருகிறார். மிகவும் கஷ்டப்பட்டு, தன்னிடம் வரும் 'கேஸ்'களைக் கவனித்துப் பார்ப்பார். கொடுத்ததை வாங்கிக் கொள்ளும் குணம் படைத்தவர்; ஏழைகளுக்கு 'இலவச' மாக வைத்தியம் செய்வார்; நடந்தே போவார்; வருவார்; டாம்பீகமே தெரியாமல் வாழ்ந்த மனிதர். நள்ளிரவில்கூட யார் போய்க் கதவைத்தட்டினாலும் 'இதோவந்து விட்டேன்' என்று கிளம்பி விடுவார். ஊருக்குள் உள்ள மற்ற டாக்டர்களுக் கெல்லாம் கிடைக்காத 'பேரும், புகழும்' இவரிடம் வந்து குடியேறின. டம்பாச்சாரியினுடைய பழைய பெருமைகளை யெல்லாம் விரிவாக எடுத்து எழுதுவதென்று ஆரம்பித்தால் என் உடலுக்குள் ஓடும் நரம்புகளெல்லாம் தளர்ச்சியடைந்து விடும்.

டம்பாச்சாரியின் பழைய வாழ்க்கையும், பழக்க வழக்கங்களும் இப்பொழுது மறைந்து போய்விட்டன. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்த 'ஆசாமி' யாக அவர் இல்லை. முன்பு குடியிருந்த சிறு வீடு; இன்று சொந்த பங்களாவாக மாறி விட்டது. அன்று நோயாளிகளைத் தேடிக்கொண்டு அவரே வீட்டுக்கு வீடு போய்க் கொண்டிருந்தார்; இன்று 'நோயாளிகள்' அவரைத் தேடிக் காத்துக் கிடக்கிறார்கள். அன்றுஅவர் வீட்டுக் கதவைத்தட்டி எழுப்ப வேண்டும்; இன்று 'காலிங்பெல்' கிணுகிணுக்கிறது. முன்பு நடை, இன்று 'மோட்டார்' அப்பொழுது 'கொடுத்ததை' வாங்கிக் கொள்ளுவார்; இப்பொழுது அப்படி யல்ல; மாதம் முடிந்ததும் தவறாமல் நோயாளிக்குப் 'பில்' போய்விடுகிறது.

அவருடைய வாழ்க்கையில் இத்தகைய புரட்சிகரமான மாறுதல் எப்படி ஏற்பட்டது? அது தான் ஒரு பெரிய புதிர் கலந்த விசித்திரம்!

○

நண்பர், வைத்தியநாதனுடைய குடும்பத்திற்கு, டம்பாச்சாரி தான் 'குடும்பவைத்தியர்.' வைத்தியநாதனும் அவரையே 'குலதெய்வமாக' மதித்துப் போற்றிநாள் தவருமல் வழிபட்டுவந்தார். ஆண்டிற்குள் அடை பட்டுக்கிடக்கும் நாட்களை இருமடங்காகப் பெருக்கினல் எவ்வளவு எண்ணிக்கை வருமோ அவ்வளவு தடவைகள், அவர் வீட்டிற்கு 'டம்பாச்சாரி' 'விஸிட்' செய்திருக்கிருர் என்று யோசிக்காமல் பதில் சொல்லி விடலாம்.

வைத்தியநாதன், தன்னுடைய வக்கீல் தொழிலில் வரும் வரும்படியில், முக்கால் பாகத்தை டம்பாச்சாரிக்குப் 'பீஸ்' பணமாகக் கொடுத்து விடுவார். அவருடைய குடும்பம் 'நாகரிக' மான வாழ்க்கையில் மூழ்கியது. குழந்தை குட்டிகளை யெல்லாம் 'நவீன யுகத்திற்குச் சாதகமான ஆயுதங்களாகவே' மாற்றி வளர்த்து விட்டார்.

பெரிய பையனுக்குத் 'தலைவலி' வலிக்கிற தென்று சொன்னலே போதும்; உடனே அவனை அழைத்துக் கொண்டு டம்பாச்சாரியிடம் போய்விடுவார். மனைவி முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு சிறிது நேரம் பேசாமல் இருந்து விட்டாலோ ஏதோ 'மன நோய்' வந்து பிடித்து விட்டதென்று எண்ணி டாக்டரை வரவழைத்து விடுவார்; கட்சிக்காரர்கள் கொஞ்சம் 'கடிந்துபேசினல்' அவர்களை டம்பாச்சாரியிடம் போகும்படி 'சிபார்சு' செய்து நாசுக்காக அனுப்பிவைப்பார். தோட்டக் காரன் ஒருநாள் மண்வெட்டியால் காலைக் காயப்படுத்திக் கொண்டுவிட்டான். ரத்தம் குபுகுபு வென்று பீறிட்டு அடித்தது. உடனே அவனை அழைத்துக் கொண்டு 'டம்பாச்சாரி'யிடம் போனர் வைத்தியநாதன். வெட்டுக் காயத்திற்குப் பெரிய 'பாண்டேஜ்' போடப்பட்டது. இரத்தத்தில் 'துரு' கலந்து 'செப்டிக்' ஆகாமல் இருப்பதற்காக ஒரு 'இஞ்செக்ஷன்' போட்டார். உடம்பிலிருந்து வெளியேறிய ரத்தத்தை ஈடு செய்வதற்கு விலை உயர்ந்த 'டானிக்' ஒன்றை எழுதிக் கொடுத்து ஒரு மாத காலம் வரை, அவனைச் சாப்பிடும்படி சொன்னர். தோட்டக்காரன் பாவம், ஏழை. இவ்வளவு வசதி செய்து கொள்ளுவதற்கு அவனல் முடியுமா! மயங்கிப் போய்க் கீழே சாய்ந்து விட்டான். மூர்ச்சை தெளிவிக்க மறுபடியும் ஒரு 'ஊசி' போடவேண்டியதாகி விட்டது.

○

ஒருநாள்! மாலைநேரம். டாக்டர் டம்பாச்சாரியின் 'கிளினிக்ஹோமில்' ஏராளமானக் கூட்டம். தன் அறைக்குள் உட்கார்ந்து நோயாளிகளைப் பரிட்சைசெய்து கொண்டிருந்தார் டம்பாச்சாரி. நோயாளிகள் தெய்வ சந்நிதானத்தில் பயபக்தியுடன் நிற்பதைப்போல, மரியாதையுடனும் பயத்துடனும் நின்று கொண்டிருந்தார்கள்.

டம்பாச்சாரியின் கழுத்தைச் சுற்றிப் பிளாஸ்டிக் 'ஸ்டெதாஸ் கோப்' கிடந்தது. அவருக்கு எதிரில் ஒருவன் வந்து உட்கார்ந் தான். 'உனக்கு என்னப்பா?' என்று கேட்டார், டாக்டர்.

அவன் ஒருகனைப்புக் கனைத் துக் கொண்டு டாக்டரைப் பார்த்து "கொடைக்கானல் மலைக் குப் போயிருந்தேன். நம்ம பெரிய பெண்ணை அங்கேதான் கொடுத்திருக்கு. மாப்பிள்ளைக்கு ......" என்று பேசியதும் டாக் டருக்குத் தலைவலி ஏற்பட்டு விட்டது.

"இந்தக் கதையெல்லாம் இப் பொழுது வேண்டாம். நான் கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல்லு..." என்றார் டம்பாச் சாரி.

"அது தானுங்க சொல்ல வந் தேன். மலைக்குப் போயிருந் தேனுங்களா? அங்கே 'பேரிக் காய்' சீசன் ஆரம்பம் ஆயிட்டுது. கொசு உபத்திரவம் சொல்லி முடி யல்லே; கூடவே குளிரும் தாங்க வில்லை. பாருங்க, உடனே ஊருக்குப் புறப்பட்டேன். வரு கிற வழியிலேயே காச்சல் கண்டி டுச்சு" என்றான்.

டம்பாச்சாரி அவனைச் சோதித் துப் பார்த்த பிறகு "இது மலே ரியாகாய்ச்சல். ரொம்பவும் ஜாக்கி ரதையாக இருக்கவேண்டும்; நான் ஒரு சீட்டுக் கொடுக்கிறேன். உடனே போய் 'ஐந்துலட்சம்' வாங்கிக் கொண்டுவா" என்றார்.

"ஐயய்யோ, ஐந்து லட்சமா? என்னங்க டாக்டர்! நான் எங்கே போவேன்?" என்று அலறினான் அவன். 'அட! ஐந்து லட்சம் என்பது பண மில்லேப்பா; பென் ஸிலின் என்கிற மருந்து" என் றார்.

பிறகு தான் அவனுக்குத் தைரியம் வந்தது. சீட்டை வாங் கிக்கொண்டு வெளியேறினான். அவனுக்கு அடுத்தபடியாக ஒரு பெண் வந்தாள். அவளுக்கு நாற்பது வயதுக்கு மேலேயே இருக்கலாம். அவள் டாக்டரி டம் "நாலுமாசமாய் வயத்துலே ஒருவலி. சாப்பாடு செல்லமாட் டேங்குது. நாட்டு வைத்தியத் திலே எனக்கு நம்பிக்கை கிடை யாது. தை மாதம், பிரசவமா கிடும்" என்றாள்.

டம்பாச்சாரிக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவளை ஏற இறங்கப் பார்த்தார். அவள் பைத்தியக்காரியாகவும் தோன்ற வில்லை; கர்ப்பிணியாகவும் தெரிய வில்லை.

"யாருக்கு அம்மா உடம்பு சௌகரியமில்லை?" என்று நிதா னமாகக் கேட்டார்.

"என் மகளுக்குங்க" என் றாள் அவள்.

"பெண் எங்கே?"

"இந்தாம்மா, செந்தாமரை. ஐயா கூப்பிடராங்க, இப்படி வா" என்று கத்தினாள். ஒரு பெண் நாணிக் கோணிக்கொண்டு எதிரே வந்து நின்றாள்.

* * *

தினசரி இந்த மாதிரியான 'ரகளை'கள் அங்கே சர்வ சாதா ரணமாக நடைபெற்று வந்தன. நோயாளிகளோ வரம்பு கடந்து பெருகிவிட்டார்கள். அவர்க ளுக்கு வரும் 'நோய், நொடிகளை' டைபாயிட், நிமோனியா, டபுள் நிமோனியா, இன்புளுயன்ஸா, டங்பீவர், மிலங்டீஸ், ரொமாட்

டீஸம், ஜாண்டீஸ், பைலேரியா, டிசண்ட்ரீ, டயரீயா, இத்தியாதி முதலிய திருப் பெயர்களைக் கொண்டுதான் வருணித்துச் சொல்லிக்கொண்டிருக்க டாக்டரால் முடிந்தது.

சகலவிதமான பிரார்த்தனைகளுக்கும் கோயில்களில் ஒரே உண்டியல் இருப்பதைப்போல, எல்லாவித வியாதிகளுக்கும் 'பென்ஸிலின்' என்ற மருந்துதான் அவரிடம் முக்கிய ஆயுதமாக இருந்து வந்தது. தலைவலியா? பென்ஸிலின்; கண்வலியா? பென்ஸிலின்; உடம்புவலியா? பென்ஸிலின்; முதுகு வலிக்கும், மூக்கு வலிக்கும் பென்ஸிலின்; எல்லாம் பென்ஸிலின் மயம்தான். முதற் சிகிச்சையிலிருந்து, கைவிடப்போகும் கடைசி சிகிச்சை வரைக்கும் அந்தப்பென்ஸிலின்தான் துணை!

'எந்த நோயாளியும் பிராண வாயு இல்லாமல் இருக்கலாம்; ஆனால் பென்ஸிலின் இல்லாமல் வாழவே முடியாது' என்பது டாக்டர் டம்பாச்சாரியின் சித்தாந்தம். அந்தக் கொள்கையிலிருந்து நூலிழை கூடப் பிறழ மாட்டார்.

நண்பர் வைத்தியநாதனுடைய வீட்டிற்குப் போவதற்காக அவர் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அவசரம் அவசரமாக 'டெட்டால்' லோஷன் போட்டுக் கைகளைக் கழுவினார். கம்பௌண்டரைக் கூப்பிட்டு 'லெதர் கேஸை' எடுத்துவைக்க உத்தரவிட்டார். என்ன ஆச்சரியம்! நண்பர் வைத்தியநாதனே அங்கே வந்து சேர்ந்தார். அவருக்குப் பின்னால் ஒரு 'புதுமுகம்' தென்பட்டது! கூடவந்த நண்பரை டம்பாச்சாரிக்கு அறிமுகம் செய்து வைத்தார் வைத்தியநாதன்.

"இவர் என்னுடைய 'கிளாஸ் மேட்!'"

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்!"

"பெயர், சூரியப் பிரகாசம்"

"குட்"

"கீழ்ப்பாக்கத்தில் 'பிராக்டிஸ்'!"

"? ! ? ! ? ! ? ! ?"

புது நண்பர், வைத்தியநாதன் காலை ஓங்கி ஒரு மிதி மிதித்தார்.

அவர் சுதாரித்துக் கொண்டு "தவறுதலாக நினைத்துக் கொள்ளக் கூடாது, மிஸ்டர் டம்பாச்சாரி. இவர் கீழ்ப்பாக்கத்தில் பிரபல டாக்டராக இருந்து வருகிறார். மகா நிபுணர். இவர் கை வைத்த 'கேசு'கள் ஒன்று கூடச் சோடை போனது கிடையாது" என்றார்.

'ஓ! ஐ. ஸீ. அயாம் வெரி க்ளாட் டு மீட் யூ.'

டம்பாச்சாரி கை குலுக்கின குலுக்கிலும், வைத்தியநாதன் சிரித்த சிரிப்பிலும், சூரியப் பிரகாசத்தின் உடல் 'ஃப்ளு' வியாதி வந்தமாதிரி ஆகிவிட்டது. எல்லாரும் சிறிது நேரம் தமாஷாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"என் சார், 'மிலங்டீஸ' (மூளை சம்பந்தப்பட்ட நோய்)க்கு நீங்கள் எப்படி 'ட்ரீட் மெண்ட்' கொடுக்கிறீர்கள்?" என்று கேட்டார் டம்பாச்சாரி, சூரியப்பிரகாசத்தைப் பார்த்து!

அவர் சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தனை செய்வதைப் போலப் பாவனை புரிந்துவிட்டு "ஈரக் களிமண்ணை வைத்துத் தலையில் கட்டச் சொல்ல வேண்டும். நாடி விழ ஆரம்பித்தால், உடனே நோயாளியை பனிரெண்டு காலன் தண்ணீர் நிரம்பியுள்ள தொட்டிக்குள் அழுத்தி வைத்திருந்து ஒரு மணி நேரம் சென்ற பிறகு வெளியே தூக்கிவிட வேண்டும்" என்று, தொண்டையிலிருந்து கிளம்பும் வார்த்தைகளை, மூளையிலிருந்து வடிந்த தத்துவம் போல வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

'நாசமாய்ப் போச்சு. நேச்சரோபதிக் டாக்டரா?' என்று மனதிற்குள்ளாகவே திட்டிக்கொண்டார் டம்பாச்சாரி. வெளியில் மாத்திரம் சிரித்துக் கொண்டே "எக்சலெண்ட் ட்ரீட் மெண்ட் சார். ஐ அக்ரீ வித் யூ. பட், ஒன் திங், நீங்க, இந்த மகத்தான சேவையைக் 'கிராமங்களிலே' போய்த்தான் 'ரிகர்ஸல்' நடத்திப் பார்க்கணும். ஏன்னு, இந்த மாதிரியான பட்டணவாசிகளிடம் இந்த வைத்தியத்தை டியாயலுக்குக்கூடக் காட்டப்படாது" என்றார்.

"ஏன்?" என்று கேட்டார் சூரியப் பிரகாசம்.

"இந்தப் பட்டணவாசிகளெல்லாம், எங்க இங்லீஷ் வைத்தியத்தை நல்லாத் தெரிஞ்சுக்கிட்டாங்க. இப்போ, நாங்க 'பிரிஸ்கிரைப்' பண்ணவே, தேவையில்லை. தலைவலியா, ஒரு 'சாரிடன்' மாத்திரை; குழந்தைக்கு ஜுரமா, ஏ. டி. சிரப்பில் பதினாலு சொட்டு வெந்நீருடன் கலந்து; உடம்பு ஜில்லிட்டுப் போச்சா, கொடு 'கொரமின் டிராப்ஸ்'; வயிற்று வலி உண்டாகி விட்டதா 'கார்பனேடிவ்' அல்லது பிஸ்மத் மிக்சர்! முறைக் காய்ச்சலும் வந்து விட்டதா, 'கொய்னா' வில் இரண்டு 'டோஸ்' இந்த மாதிரியாக அவர்கள் மாறிவிட்டார்கள்

சார், மாறிவிட்டார்கள். ஏதோ பணத்தைக் கொட்டிப்படித்த குற்றத்துக்காக, இந்தத்தொழிலை விட முடியவில்லை. எங்கள் மானத்தைக் காப்பாற்ற பென்ஸிலின் என்ற ஒரு 'அமிர்த சஞ்சீவி' வந்து சேர்ந்தது." என்று சொல்லி ஒரு ஆழ்ந்த, நீண்ட, பெருமூச்சு விட்டார்.

வாசல் பக்கமாக ஏதோ கூச்சல் கேட்டது. திடுதிடுவென்று நாலைந்து பேர்கள் உள்ளே நுழைந்தனர்.

மூவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். ஒருவனை அலங்கோலமாகத் தூக்கிக் கொண்டு வந்து உள்ளே கிடத்தினார்கள் அந்த நாலைந்து பேர்களும். தூக்கிக் கொண்டுவந்த ஆசாமி நினைவிழந்து கிடந்தான்.

டம்பாச்சாரி அவனுடைய உடம்பைத் தொட்டுப் பார்த்தார். ஜில்லிட்டுக் கொண்டே வந்தது.

"என்னய்யா, இவருக்கு?" என்று கேட்டார் வந்தவர்களைப் பார்த்து. எல்லாரும் பேந்தப் பேந்த விழித்தனர். ஒருவராவது வாய் திறந்து பதில் சொல்லவில்லை. டம்பாச்சாரி இன்னும் அவனைக் கூர்ந்து பார்த்தார். கழுத்தின் ஓரமாக வீக்கம் கண்டிருந்தது.

"ரொம்ப சீரியஸ் கேஸ்; இந்த ஆசாமிக்கு 'டிப்தீரியா (கழுத்தின் ஓரமாகத் தொண்டைக்குள் புறப்படும் கட்டி) இதற்கு 'ஆன்ட்டி, டிப்தீரியா சீரம்' குறைந்தது 'பத்து' 'ட்யூப்'களாவது வேண்டுமே' என்றார்.

சூரியப்பிரகாசம் அவர் காதருகில் போய் ஏதோ சொல்லுவதற்காக நெருங்கினார். கூட்டத்திலிருந்த எல்லாரும் சிரிக்கவே, பயந்து பின் தங்கிவிட்டார்.

ஒருவன் சொன்னான்: "இவரு எங்க தெரு ஆசாமிங்க டாக்டர். 'ரேஷன்' வாங்க வந்த இடத்திலே, 'வெல்லம்' தாரோம்னு கடைக்காரர் சொன்னாரு. உடனே ஒரு பெரிய 'படை' திரண்டு கிளம்புச்சு. அதிலே அகப்பட்டு 'முளி முளி'ன்னு முழி பிதுங்கிப் போயிட்டாரு. உடம்பு வெளியேயும், தலை உள்ளேயுமா மாட்டிக்கிட்டுது. கடைகியிலே ஒரே 'இழுப்பா' நாங்களெல்லாம் கூடி இழுத்து வெளியே போட்டோம். மயக்கம் கண்டிடுச்சு இவருக்கு!"

டம்பாச்சாரியின் முகத்தில் ஈயாடவில்லை. சூரியப்பிரகாசம் சூடுகண்ட பூனை மாதிரி அங்கிருந்து நழுவிவிட்டார்; வைத்தியநாதன் வாயைத்திறந்தவர் மூடவேயில்லை.

மயங்கிக் கிடந்த 'ஆசாமி' நினைவு பெற்று எழுந்து பார்த்தான். தன்னைச்சுற்றி இத்தனை பேர்கள் நிற்பதைக் கண்டதும் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு ஓட ஆரம்பித்தான்.

●

அந்தச் சம்பவம் நடந்ததிலிருந்து டாக்டர் டம்பாச்சாரியின் முகத்தில் அசடு வழிய ஆரம்பித்துவிட்டது. மூளை சரியாக வேலை செய்யவில்லை. வைத்தியநாதனும், சூரியப்பிரகாசமும் அவருக்குத் தினசரி தேறுதல் மொழி கூறி ஆறுதல் சொல்லி வந்தனர்.

ஒரு நாள் நோயாளியின் உடம்பைத் தொட்டுப் பார்த்துவிட்டு 'பல்ஸ்' இல்லை என்று சொல்லி விட்டார். அவன் நடுங்கிப்போய் 'டாக்டர்' என்று குழறினன். 'மன்னிக்கவும், 'டெம்பரெச்சர்' இல்லை என்பதற்குப் பதிலாகப் 'பல்ஸ்' (நாடி) என்று தவறிச் சொல்லிவிட்டேன்' என்ருர்.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு அவருடைய மனமும் மூளையும் தீவிரமாக வேலை செய்யத் தொடங்கின. உணவு நெருக்கடி அதிகமாக, ஆக, நோயாளிகளும் அதிகரித்துக் கொண்டே வந்தார்கள். அவருடைய 'கிளினிக் ஹோமை' ஒட்டினற்போலப் புதிதாக ஒரு 'வார்டு' கட்டி முடித்தார், ஏராளமான 'பெட்'டுகள் எல்லா வசதிகளுடனும். டாக்டர் டம்பாச்சாரி, கொஞ்ச நாட்களுக்குள் ஒரு 'குட்டிக் குபேரர்' ஆகிவிட்டார்.

எந்த மனிதனுடைய வாழ்க்கையும் ஒரேவிதமான ரீதியில் போகுமென்று நிச்சயமாகச் சொல்ல முடியாதல்லவா? அதில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட நேரிடும். இயற்கையின் விதியே இப்படித்தான் அமைந்திருக்கிறது.

ஒரு நாள் டாக்டர் டம்பாச்சாரி, தினசரிப் பேப்பரைப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது,

அறிவிப்பு

"இன்னும் சில நாட்கள்வரை 'பென்ஸிலின்' என்ற மருந்தைச் சப்ளை செய்ய முடியாததற்கு வருந்துகிறோம்''.

என்ற அறிக்கையைப் பார்த்துவிட்டார். அவர் தலை சுழன்றது; பூகம்பம் ஏற்படுவதுபோல இருந்தது; அவருடைய ஊனக் கண்களுக்கு எல்லா நோயாளிகளும் மறைந்தொழிந்துபோய் விட்டதாகவே தோன்றியது.

பிறகு என்னென்ன நடந்தனவோ, எனக்கொன்றும் தெரியாது!

பொன்னி

சந்தா விவரம்

	ஒரு ஆண்டு	ஆறுமாதம்
இந்தியா, இலங்கை	ரூ. 6–0–0	ரூ. 3–0–0
பர்மா, மலேயா, முதலிய வெளிநாடுகள்	ரூ. 6–12–0	ரூ. 3-6-0

சந்தாத் தொகை முன்பணமாகவே செலுத்தப்பட வேண்டும், இலங்கை நண்பர்கள் வி. பி. பி. மூலம் தபால் செலவுடன் தொகை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பொறுப்பாளர்.

உயர்ந்த ரக உற்பத்திகளுக்கு உகந்த இடம்

ஸ்டார் ஆப்
இந்தியா
பென்சில்களுக்கு

மெட்ராஸ்
பென்சில்
பாக்டரி

ஸ்டேஷனரி
சாமான்களுக்கு

வி. பெருமாள்
செட்டி & சன்ஸ்

சிறந்த லித்தோ,
அச்சு வேலைக்கு
ஹோ & கோ.

3, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை - 1.

Prize winners of C. No. 43 Ist Prize 1). M. Indumati, Berhampur 2). S. R. Mohpatra, Nimpara 3) Prabhakarao, Hyderabad Dn 4) S. Iman Ashraf, Basti 5). M. V. Subramaniam Dindigul IIIrd 1) R. S. Ahluwala, Ludhiana 2) Prabhakarao, Hyderabad Dn 3) C. V. M. Reddy, Chikballpur 4 M. R. Choudhury, Calcutta 5) A. Ramanadhlah, Nellore 6) Bacharam, Kanpur IVth prize Om Prakash Gupta, Dehra Dun and Vth Prize 1) Mohanlal, Jamshedpur 2) B. N. Das, Sambalpur 3) M. S. U. Farooqui, Allahabad,

Full particulars are published in the Rainbow dated 10th. Feb 51.

ரூபாய் 25,000 பரிசு

ரிஜிஸ்டர் நெ. 249. **போட்டி நெ. 45.**

M/s Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000, முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு, இரண்டாம் பரிசு ரூ. 7000 முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000 முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000ம் முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு5ம் பரிசு ரூ. 1000ம் அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்கவேண்டும். முடிவு தேதி 26—2—51

RAINBOW COMPETITIONS

KEY S NO. 43 *59 TO 74 = 266

69	66	63	68
72	59	62	73
60	71	74	61
65	70	67	64

We hereby certify that the above is the solution in original deposited with us by Rainbow Competitions No 43 on 19.12.50 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank

For The Premier Bank of India Ltd

V Ramamurthy 29.1.51

Agent Madras

விடை 12—3—51.

பிரவேசக்கட்டணம் : கூபன் 1க்கு ரூ. 1. 6 கூபன் கொண்ட ஸெட் 1க்கு ரூ. 5

274

விடைகள் கண்டுபிடிக்கும் விதம் : 61 முதல் 76 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும்; எப்படிக் கூட்டினாலும் 274 வரும்படியாக அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கவேண்டும்.

விதிகள் : தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்படவேண்டும். பிரவேசக் கட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசிதை கூபன்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும், வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்ட பூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிரு முறை பத்திரிகையில் பிரசுரிகப்படும். அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடையனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

The Rainbow Competitions No. 45,
306 (14), Mint Street, MADRAS-1.

வானம்பாடி

-ரா. தணலன்-

முப்பதாம் அத்தியாயம்

மூன்று மாதம்

விசாரணை நடந்தது. ஒடுங்கிக் கொண்டிருந்த ருக்மணியின் கைகளைப் பிடித்துக் கொண்டு கோபு நின்றுகொண்டிருந்தான். வழக்கு முடியும்வரை ராஜ கோபாலன் வரவே இல்லை. அந்த விசித்திர மனிதன் யாரையும் ஏறிட்டுப் பார்க்கவில்லை. அவன் விசாரணைக் கூண்டில் தலை கவிழ்ந்தபடி ஏறிநின்றான். விசாரணை முடியும்வரை ஒன்றும்பேச வில்லை. ஜட்ஜ் ஏதோ கேள்வி கேட்டபோதுமாத்திரம் சொல்ல வேண்டியவற்றைத் தான் முன்பே சொல்லிவிட்டதாகக் கூறினான்.

வழக்குகள் எல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டன. கிருஷ்ணசாமிக்கு மாத்திரம் மூன்று மாதம் வெறும் காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அவன் மீண்டும் அழைத்துச் செல்லப்பட்ட போது ருக்மணி கண்ணீர் விட்டுக் கொண்டு நின்றாள். அவளைப் பார்ப்பதற்காக ஒரு பெரிய கூட்டம் கூடிக்கொண்டிருந்தது. அதில் யாருக்கும் அவளுடைய கண்ணீரின் அர்த்தம் விளங்கியிருக்காது.

ராஜகோபாலன் வந்து அதட்டும் குரலில் கோபுவை அழைத்தான். உடல் முழுவதும் நடுநடுங்கிக் கொண்டிருந்த ருக்மணியைக் கோபு ஏறிட்டுப் பார்த்தான். "அக்கா" என்ற பரிதாபகரமான அழைப்பு அவன் தொண்டைக்குள்ளேயே அமுங்கி மடிந்தது. ஆர்வத்துடன் அவனைத் தூக்கி அணைத்துக்கொண்டு பின் கீழே விட்டு விட்டாள் ருக்மணி. வேலைக்காரன், தன் எஜமானனுக்குப் பயந்தவனாய்க் கோபுவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனான்.

இன்னது செய்கிறோம் என்ற நினைவை மறந்தவளாய் ருக்மணி காரில் ஏறி அமர்ந்தாள். ராமசாமியும் ஏறிக்கொண்டவுடன் வண்டி புறப்பட்டது. இந்தச் சோகத்தில் தன் தங்கை அமிழ்ந்து முழுகியே போய்விடுவாளோ... என்று ராமசாமி யோசிக்கலானான். அந்தச் சமயத்தில் கிருஷ்ணசாமியின் மேல் கூட அவனுக்குக் கோபம் வந்தது. மனம் வருந்தி மன்னிப்புக் கோரும்போதுகூட மறுப்பவன் மனிதனாக இருக்க முடியுமா

19791

என்று யோசித்தான், ராமசாமி. ஆனால் அப்போது அவனுடைய நிலையையும் எண்ணிப் பார்க்கும் பொழுது...?

முப்பத்தோராம் அத்தியாயம்

அவள்தான் ரோஸி

தன் நினைவற்றுப்போனவனுய்க் கோபு காரில் உட்கார்ந்திருந்தான். அவன் தமயன் கார் ஓட்டிக்கொண்டிருந்தான். அவனுக்குச் சிறிது சிறிதாக ஏதோ புரிந்துகொண்டிருந்தது, மங்கல் கண்களை உடைய அந்த மனிதன் ருக்மணியின் கணவன். அவர்களுடைய மகள்தான் ரோஸி. ருக்மணியின் அண்ணன் ராமசாமி. ஆனால் இவர்களுக்குள் தொடர்பு இருக்கவில்லை. கணவனும் மனைவியுமே ஒருவிதமான தொடர்பும் இல்லாமல் நீண்டகாலம் வாழ்ந்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் தன் தமயன்.

அந்த மங்கல் விழிகள் உள்ள மனிதன் பிச்சைக்காரனானதற்கும் திருடினதற்கும் சிறைப்பட்டதற்கும் எல்லாவற்றிற்கும் மூலகாரணம் தன் தமயன். ருக்மணியின் இரட்டை வாழ்விற்குக் காரணம் தன் தமயன். ரோஸி பிச்சைக்காரச் சிறுமியாய்த் திரிந்ததற்கும் காணுமல் போனதற்கும் காரணம் அவனே. இவை மாத்திரம் அல்ல... ராமசாமியின் குடும்பம் சீரழிந்ததற்கும் இவனைப் போன்ற முதலாளிகளே காரணம். தன் தமயனைப் போன்ற முதலாளிகள் பலபேர் இருக்கிறார்கள் என்பதை நினைத்தவுடன் அவனுக்கு ரொம்பப் பயமாக இருந்தது. 'ஐயோ இந்த உலகத்தில் வசிக்கும் மனிதர்கள் இவர்களால் எவ்வளவு கஷ்டப்படுகிறார்களோ.........?' என்று நினைத்து அவன் மனம் நடுங்கியது.

கார் ஒருபக்கம் திரும்பிய பொழுது ஒரு அதிசயமான பாட்டுக்குரல் அவன் காதில் விழுந்தது; திடுக்கிட்டு நாற்புறமும் அவன் பார்த்தான். சற்று தூரத்தில் ஒருகும்பல்வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. ஒரு சிறிய கம்பத்தின்மேல் நின்று கொண்டு ஒரு பெண் பாடிக்கொண்டிருந்தாள். அது அற்புதமான வேடிக்கையாக இருந்தது.

ஆ...... அவள்தான் ரோஸி. காரின்கதவைத் திறந்துகொண்டு எட்டிப் பாய்ந்து விட்டான் கோபு. அவன் கால்களின்மேல் பின்சக்கரம் ஏறி இறங்கியது. 'ரோஸீ...' என்ற அலறல்தான் அவன் வாயிலிருந்து வெளிப்பட்டது. திடுக்கிட்ட அந்தப் பெண் "கோபூ..." என்று கூவினாள். அடுத்தகணம் கம்பத்திலிருந்து சுருண்டு விழுந்துகொண்டிருந்தது அவள் உடல்.

கழைக் கூத்தாடிகள் சுற்றுமுற்றும் பார்த்தனர். கார் நின்றுவிட்டதையும் வேலைக்காரன் ஒருவன் கோபுவை எடுக்க முயன்றதையும் அந்தப் பையன் கூட்டத்தை நோக்கிக் கையை நீட்டி நீட்டிக் காட்டிக்கொண்டு 'ரோஸீ ரோஸீ!' என்று கூவியதையும் கூத்தாடிகள் தலைவன் கண்டான். கீழே விழுந்த அந்தப்

பெண் "கோபூ... கோபூ..." என்று கூவிக்கொண்டு மெல்ல மெல்ல நகர்ந்து கூட்டத்தை விட்டு வெளியேவர முயன்ருள். பெரிய மனிதர் ஒருவர் அவளை மெதுவாக எடுத்துக்கொண்டு வந்து பையன் அருகில் விட்டார்.

"கோபு........"

"ரோஸீ......"

அடிபட்ட அந்த இரண்டு உருவங்களும் ஒன்றையொன்று கட்டிப் பிடித்துக்கொண்டன.

ஆஸ்பத்திரியில்கூட அவர்கள் த்னிப் படுக்கைகளில் கிடத்தப் பட அனுமதிக்கவில்லை.

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

எதிரொலி

மறுநாள் கோபுவுக்கு ஆபத்தான ஜன்னி கண்டுவிட்டது. ரோஸீ... அக்கா... உங்கம்மா... ருக்மணியக்கா... அண்ணன் ராமசாமி அண்ணன்... என்று பிதற்ற ஆரம்பித்து விட்டான். நோய் இருதய சம்பந்தமானதாகி விட்டதென்றும் அவன் யார் யாரையோ பார்க்க விரும்புவதாகவும் அவர்களை அழைத்துக்கொண்டு வந்தால் சிறிது ஆறுதல் கிடைக்கும் என்றும் டாக்டர் கூறினர். அதுமாத்திரம் அல்ல... நோய் குணமானல் கூட நெடுநாளைக்கு அவன் மனதிற்குச் சிறு அதிர்ச்சிகூட ஏற்படாமல் பார்த்துக்கொண்டு வர வேண்டும் என்றும் கூறினர்.

கோபுவின் தாய், தமயன் முதலியவர்கள் பார்க்க வந்தார்கள். ஆனல் அந்த ஜன்னியில் கூட அவன் அவர்களைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக்கொண்டான். தவிர அவர்களைப் பார்த்த போது அவன் மார்புப் படபடப்பும் அதிகரித்தது. ரோஸியை மாத்திரம் அவன் தன் கைகளால் இறுகப் பிடித்துக்கொண்டிருந்தான். பலமாக அடிபட்டிருந்தபோதிலும் அவள் இர

அடுத்த தொடர்கதை

?

எதிர்பாருங்கள்

வும் பகலும் கண் உறங்காது அவனையே கவனித்துக்கொண்டிருந்தாள்.

வேறு வழி இல்லாமல் ராஜகோபாலன் ருக்மணிக்கு ஒரு ஆள்மூலம் சொல்லி அனுப்பினான். கேள்விப் பட்டவுடன் அவள் ஓடோடியும் வந்தாள். ராமசாமியும் வந்தான்.

கடினமான முயற்சிகளில் இரண்டு நாட்களுக்குப் பின் கோபுவின் ஜன்னி குறைந்து பிதற்றலும் நின்றது. ஒரே படுக்கையில் ஒருவரை ஒருவர் பார்த்தவர்களாக அளவுகடந்த நோயில்கூட ஒருகணமும் பிரிய முடியாத அவ்வளவு அன்புடன் நேசத்துடன் படுத்துக்கொண்டிருக்கும் அந்தச் சின்னஞ்சிறிய உருவங்களைப் பார்த்தபோது ராமசாமியின் மனத்தில் சொல்லமுடியாத பாசமும் அன்பும் ஊற்றெடுத்தன. அவன் தன் மகளை அழைத்து வருவதற்காகச் சென்றான்.

தன் உயிருக்கும் மேலாக நேசித்த ஒரே மகள்...! அவளை நீண்ட காளாகப் பிரிந்திருந்த ருக்மணி.— மீண்டும் கண்டபோது அவள் உள்ளம் அன்பினால் பாறையாக உறைந்தது. வாஞ்சையுடன் அவள் நோயாளியின் அருகில் அமர்ந்தாள். அழுது அழுது அலுத்துப்போய் வற்றியிருந்த அவள் கண்கள் அன்புக்காக மீண்டும் கண்ணீர் பெருக்கின. தன் மகளின் முகத்தோடு முகம் வைத்துக்கொண்டு நெடுநேரம் அவள் விம்மிக்கொண்டிருந்தாள். தன் தந்தையையே புரிந்துகொள்ள முடியாத நிலையில்இருந்தரோஸிதாயையும்அவ்வளவு நன்ருகப் புரிந்துகொள்ளவில்லை. அவள் மனதில் ஏதோ ஒரு விதப் பாசம் உண்டாயிற்று. அதனுல் அவள் ருக்மணியை நேசித்தாள். அவ்வளவுதான்.

* * *

மூன்று மாதங்கள் எவ்வளவு விரைவில் ஓடிவிட்டன என்று எண்ணியபோது ருக்மணி அதிசயப் பட்டாள். அந்த மூன்று மாதத்தின் ஒவ்வொரு நாளையும் அவள் நீண்ட நாளாக அனுபவித்திருந்தாள். உடல் நலமடைந்து வீட்டிற்கு வந்தவுடன் ரோஸியும் கோபுவும் இணைபிரியாமல் திரிந்து வந்தார்கள். மணியும் வந்து சேர்ந்து கொண்டாள். அந்த வீடே ஒரு குழந்தைகள் ராஜ்யமாக மாறிவிட்டது.

அடுத்த நாள் தன் கணவன் விடுதலைநாள் என்பதை நினைக்கவுமே ருக்மணியின் உடல் புல்லரித்தது. அந்த நாளை ஏனே அவள் வேதனையுடன் எதிர்பார்த்திருந்தாள். மீண்டும் அவர் அவளைப் பார்க்க விரும்பவில்லை. ஆனுல் மகளுக்காகப் பரதவித்திருந்த அந்தத் தந்தை...மகளை முத்தமிட்டதற்காக உதைபட்ட அந்தத் தந்தை மீண்டும் தன் மகளைக் காண வேண்டாமா...? அவர்களுக் கிடையே விரும்பப் படாத ஒரு இடையூருகத் தான் எதற்காக இருக்க வேண்டும்...?

மகளைப் பிரிந்து தான் அடைந்த துயரங்கள் யாவும் அவள் நினைவுக்கு வந்தன. ரோஸி வந்தபிறகு தான் அவள் மீண்டும் தன் மாடி அறையைத் திறந்தாள். அங்கே வைக்கப்பட்டிருந்த அவளுடைய உடைகள் இப்பொழுது அவள் உடலுக்கு எவ்வளவு சிறியதாக இருந்தன ? பயத்தாலும் துக்கத்தாலும் அவள் நடுநடுங்கினுள். ‘போதும். வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டிய தெல்லாம்...



அனுபவித்தாயிற்று. எல்லா வித இன்பங்களின் உச்சநிலையையும் துன்பங்களின் உச்ச நிலையையும் கண்டாயிற்று. இந்த அனுபவங்களே போதுமானவை. எஞ்சிய என் வாழ்நாளே மனதிற்குச் சிறிதாவது அமைதி கொடுக்கும் ஏதாவது ஒரு துறையில் கடத்திவிட வேண்டுமே...' என்று அவள் நினைத்தாள்.

காலையில் பத்திரிகையில் பார்த்த ஒரு விளம்பரம் அவள் நினைவுக்கு வந்தது. அதை மீண்டும் எடுத்துப் பார்த்தாள். அவள் மனம் ஒரு முடிவிற்கு வந்தது. அதன் பிறகு அன்று அவள் உறங்கவில்லை.

கணக்குப்புத்தகங்களைப் புரட்டினாள். அவள் சொத்துக்களின் மதிப்பு ஏறக்குறையப் பதினொரு லட்சம் இருந்தது. உறங்கிக் கொண்டிருக்கும் கோபுவையும் ரோஸியையும் பார்த்தாள். கடைசி முறையாகத் தன் இதய அன்பெல்லாம் வெளிப்படும் படியாக அவர்களை முத்தமிட்டாள். அவள் இதழ்களிலே இலேசான ஒரு புன்னகை தவழ்ந்தது. அந்தக் குழந்தைகளிலே ஒரு எதிர்காலக் கணவனையும் மனைவியையும் அவள் உள்ளம் கற்பனை செய்து பார்த்தது.

தன் தமயனுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்தாள். மறுநாள் கோபுவையும் ரோஸியையும் சிறைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். விடுதலையாகி வரும் மைத்துனரை அழைத்து வர வேண்டும். சொத்துக்களை அவர்கள் இருவருமாகச் சேர்ந்து உசிதமான வழியில் உபயோகப்படுத்த வேண்டும். அவ்வளவுதான். சுருக்கமாக அமைந்தது அந்தக் கடிதம்.

அவள் புறப்பட்டு விட்டாள்.

○

துள்ளி விளையாடும் சின்னஞ்சிறிய குழந்தைகளின் மத்தியிலே, மலைகளும் காடுகளும் அடுத்த இந்தச் சிறிய நகரின் பள்ளிக் கூடத்திலே, இனிமையான இசை பாய்ச்சிக் கொண்டிருக்கும் ஒரு சோக நிழலைப் பற்றி வெளி உலகம் அவ்வளவாகக் கேள்விப்பட்டிருக்க முடியாது. ஒரு காலத்தில் அவள் ஊரெல்லாம் நாடெல்லாம் புகழும்பிரபல நட்சத்திரமாக இருந்தாள் என்பதை இப்பொழுது யாருமே நம்பமாட்டார்கள்.

(முற்றிற்று)

சொத்துரிமை

"ஆனா"

நான் பாரிஸில் இருந்தபோது ரேனா போர்னவெல் என்ற இளைஞனோடு பழகும் வாய்ப்பைப் பெற்றேன். அடிக்கடி வருத்தம் தேங்கிய முகத்தோடு காணப் பெற்றாலும் அவன் பழகுவதற்கு மிக நல்ல நண்பன். பொதுவாகச் சமூகப் பழக்கங்களையும், அதன் குறைபாடுகளையும்பற்றிக் குத்தலாகவும் கிண்டலாகவும் அவன் பேசும்போது யாரும் சிரிக்காமலும் சிந்திக்காமலும் இருக்க முடியாது.

"உலகத்தில் நல்லவர்களே கிடையாது; ஒருவரோடு ஒருவனை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிலர் நல்லவர் போலத் தோற்றம் பெறுவர். பலர் பலத்த சோதனைக் குட்பட்டுத் தவிக்கிறார்கள். அந்தச் சோதனையின் முன் நிற்கவே வலியில்லாதவர்கள் மகாப் பாவிகளாகக் கருதப்படுகிறார்கள். அந்தச் சோதனையைப் பெறாமலே சுகமாக வாழ்ந்து கழித்துவிடுபவர் புண்ணியாத்மாக்களாகக் கருதப்படுகிறார்கள்" என்று அவன் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். அவன் சொல்லுவதைப்பற்றிப் பலநாள் சிந்திக்கவில்லை. அதன் முழுப் பொருளும் பின்னால்தான் விளங்கலாயிற்று.

அவனுக்கு இரண்டு அண்ணன்மார் உண்டு. அவர்களிடம் அவன் நெருங்குவதே இல்லை. அவனது அண்ணன்மார்களின் பெயருக்கும் அவன் பெயருக்கும் குடும்பப் பெயர் பொதுவாக இல்லை. ஏதோ வேற்றுமை இருந்தது. அவர்களது குடும்பத்தில் ஏதோ கோளாறு நடந்திருக்கிறது என்பதைக் குறிப்பால் அறிந்து கொள்ள முடிந்தது. இன்னதுதான் என்று சரியாக என்னால் தீர்மானிக்க முடியவில்லை.

ஒரு நாள் அவனோடு சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது, மெதுவாக நான் அவர்களது குடும்ப ரகசியத்தைப்பற்றிக் கிண்டத் தொடங்கினேன்.

"உன்னுடைய தாயாருக்கு எத்தனை கணவன்மார்கள்? நீ எந்தக் கணவனின் குழந்தை?" என்றேன். அவனுடைய முகம் திடீரெனக் கறுத்துவிட்டது. கொஞ்சநேரம் பேசாமலேயே இருந்தான். ஏனிதைக் கேட்டோம் என்றாகிவிட்டது. பிறருடைய ரகசியத்தைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுவதில் கேட்பவருக்கும் பயனில்லை; சொல்லுபவருக்கும் பயனில்லை. மனத்திலே அனாவசியமான சுமைதான் மிச்சம் என்பதை அந்தத் தேய்ந்த திருமுகம் புலப்படுத்திற்று;—இல்லை அறிவுறுத்திற்று.

"நான் என்னுடைய வாழ்க்கையின் அந்தரங்கத்தை எடுத்துச் சொன்னால், எப்போதும பழகுவதுபோல் மீண்டும் என்

னுடன் பழகுவாயா?" என்று அவன் தளர்ந்த குரலில் கேட்டான். அவனுடைய கையை என் கையோடு சேர்த்து விரல் கோர்த்துக் கொண்டேன். என்னுடைய விழிகள் அவன் என்னிடம் எதிர்பார்த்த மறுமொழியைக் கூறிவிட்டன. அவன் பேசத் தொடங்கினுன்.

என்னுடைய தாய் மிகப் பயந்தவள். அவளுடைய கணவன் அவளிடம் இருந்த கொஞ்சம் பணத்தைச சுரண்டுவதற்காக அவளிடம் அபாரமான காதல் நாடகத்தை ஒரு அங்கம் விடாமல் நடத்தித் திருமணம் செய்து கொண்டான். பின்னுல்தான் என் தாய் தான் செய்த தவறை உணர ஆரம்பித்தாள். அவளுக்குப் பொருத்தமான கணவன் அவனில்லை என்பதை ஒவ்வொரு நாளும் அவள் உணர்ந்து கொண்டே வந்தாள். உணர்ந்தாள் என்பதைத் தவிரச் செயலில் எதையும் அவள் செய்பவளாக இல்லை. அந்தக் கொடூரமான கணவனுக்கு அடங்கிய மனைவியாகவே வாழ்ந்து வந்தாள். அவளது கணவன், வீட்டு வேலைக்கு வரும் எந்தப் பெண்ணையும் விட்டு வைப்பதில்லை. வேலைக்காரர்களின் மனைவி, மக்கள் அத்தனை பேரும் அவனிடம் கற்பை அடைவு வைக்க வேண்டியதாயிற்று. என் தாயே பல சமயம் தாகு வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்குட்படுத்தப் பட்டிருக்கிருள். என் தாயின் எதிரிலேயே அவன் வேலைக்காரப் பெண்களோடு கேளிக்கையில் ஈடுபட்டிருப்பான். இவ்வளவு வேட்டைக் கிடையிலும் என் தாயின் மூலமும் அவனுக்குப் பிள்ளைகள் பிறக்காமலில்லை. என் தாய்க்கு நானுட்பட மூன்று குழந்தைகள்.

என் தாய் மேசையின்கீழ் அகப்பட்ட எலியாகவே பல நாள் வாழ்ந்தாள். எவ்வளவோ துன்பத்தாலும், இடையருத மனக் கவலையாலும் என் தாயின் அழகு பாதிக்கப்படாமலேயே இருந்தது.

என் தாயின் கணவனுக்குப் பல நண்பர்கள் உண்டு. அவர்கள் அடிக்கடி வீட்டுக்கு வந்து போவதுண்டு. அவர்கள் என் அன்னையோடு பேச மிகவும் ஆசைப்படுவார்களாம். தாயின் கணவன் அதற்குப் பெரும்பாலும் இடம் கொடுக்காமலேயே இருந்தான். அவனது நண்பர்களில் போர்னவெல் என்ற படைத் தலைவரும் ஒருவர். என் தாயின் கணவன் இல்லாதபோது அவர் அடிக்கடி வந்துபோவார். அவர் போர்ப் பயிற்சிகளைப்பற்றியும், போர்க் களத்தைப்பற்றியும் என் அறியாமை மிகுந்த தாய்க்கு விரித்துக் கூறுவார். என் தாய்க்கு அவை யெல்லாம் புதியனவாக இருக்கும். எல்லாவற்றையும் வியப்போடு கேட்டுக் கொண்டிருப்பாள். கேள்விக்கு மேல் கேள்வி போடுவாளாம். அந்தப் போர் வீரரும் மிக அன்போடு கூறிக்கொண்டிருப்பாராம். அவர் மனைவியை இழந்தவர். அவருடைய நிலைமைக்காக என் தாய் பலமுறை வருந்தியது துண்டாம். ஏமாற்ற மடைந்த வாழ்க்கையிலே என் தாய்க்கு அவர் ஓர் ஊன்றுகோலாய் அமைந்தார். நான் சிறு பிள்ளையாயிருக்கும்

போது என்னைப் பல முறை சினிமாவிற் கெல்லாம் கூட்டிக் கொண்டு செல்வார். என் அம்மாவும் அவரும் பேசிக்கொண்டிருக்கும் சுவரண்டை நானும் போய் உட்கார்ந்திருப்பேன். அவர் என்னை வாரி அணைத்துக் கொள்ளுவார். சிகரெட் துண்டைச் சில சமயங்களில் விளையாட்டாக வாயில் வைத்து இழுக்கக் கற்றுத் தருவார். நான் இழுத்துப் புகைவிடுவேன். என் அம்மா, "ஏண்டா போக்கிரிப் பயலே" என்று சொல்லித் தூக்கி முத்தம் கொடுப்பாள். இது போன்ற சமயங்களில் என் தாயின் கணவன் வந்தால் நான் போய் 'அப்பா' என்று சொல்லிக்கொண்டு ஓடுவேன். "இந்த மாமா சிகரெட் குடிக்கக் கற்றுத் தரார்" என்பேன். அந்த நேரத்தில் என் அம்மா மெல்ல அங்கிருந்து நழுவிவிடுவாள்.

என் அண்ணன் இருவரும் என் தாயின் வயிற்றிலே தோன்றினாலும் மனித பாசம் அற்றவர்கள். தாயை ஒரு வேலைக்காரியைக் காட்டிலும் மேலாக நினைக்கவில்லை. என் தாய் அந்தப் போர் வீரரோடு பேசிக்கொண்டிருக்கும் போது கூப்பிட்டு ஏதாவது வேலை சொல்லுவார்களாம். என் தாய் என்னிடம் மிக அன்பாக இருந்தாள். பல சமயம் தனியாக உட்கார்ந்து கொண்டு கண்ணீர் வடிப்பாள். 'ஏன் வடிக்கிறாய்?' என்று கேட்டால் சொல்ல மாட்டாள். நான் தூங்கும் போதெல்லாம் அவள் என்னையே பார்த்துக் கொண்டிருப்பாள். அவள் சில சமயங்களில் என்னைப் பார்த்து, "நீ அந்தப் படை வீரர் போர்னவெல் போலவே இருக்கிறாய்" என்பாள். "என்னம்மா என்ன சொல்லுகிறாய்" என்று கேட்டால் "அவரைப்போலவே உனக்கும் அன்பான இதயம் இருக்கிறது" என்று சொல்லிச் சமாளித்துக்கொள்ளுவாள். அவள் எதை அன்று மறைத்துச் சொன்னாள் என்பது எனக்குப் பின்னால்தான் புலனாயிற்று.

எனக்குப் பதினெட்டு வயதாயிற்று. என் தாய் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். சில நாளில் அவள் இறந்துவிட்டாள். அவள் இறக்கும்போது அவளுக்குரிய சொத்துரிமை குறித்து ஒரு உயில் எழுதி வைத்திருந்தாள். அதைப் படிக்கும்போது நானும் இருந்தேன். படை வீரர் போர்னவெல் இருந்தார் என் தாயின் கணவன் முதலிய எல்லாரும் இருந்தனர்.

என் அன்னையின் உயில் இது தான்.

"நான் யாண்டும் பரந்த பேரருளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மேலாக என் அருமை மகன் ரேணுவிடம் அதே மன்னிப்புக்காக மன்றாடுகிறேன். என்னுடைய அருமைக் குழந்தை என்னை விரைவில் புரிந்து கொள்ளட்டும். நான் வாழ்க்கை முழுவதும் இன்னலுற்றேன். அந்த நீண்ட துன்பத்தினிடையே படை வீரர் போர்னவெல் கைதூக்கிவிட்டு, இன்பம் ஒன்றிருப்பதைப் புலப்படுத்திக் காட்டினார். அவர் காட்டிய இன்ப உலகத்தின் வெற்றி தான் என் கடைசி மகன் ரேணு.

"நான் என்னை மணந்து

கொண்ட கணவனை ஏமாற்றினேன். அதற்காக வருந்துகிறேன். என்னை வருத்திய கணவனை மன்னிக்கிறேன்; ஆனால் அவர்பால் கருணை காட்ட முடியாது.

"எனது மூத்த இரண்டு குழந்தைகளும் என் வயிற்றில் தோன்றிய தொடர்புடையன வேயன்றி அவை என்மீது கருணையுடையன அல்ல. நான் வேண்டா விருப்போடு, மன மகிழ்ச்சியில்லாதபோது பெற்ற குழந்தைகளிடம் எப்படி நான் அன்பை எதிர்பார்க்க முடியும்? எப்படி உயர்ந்த பண்புகளை எதிர்பார்க்க முடியும்? அவர்கட்கு என் சாவை உரிமையாக்குகிறேன்.

"நான் மனிதர்களைக் கண்டு பயந்தேன். மனித சமுதாயத்தின் கொடூரமான சட்ட திட்டங்களைக் கண்டு மிக நடுங்கினேன். இப்பொழுது பரந்த மெய்ப் பொருளின் முன்னின்று நடுக்கமின்றிப் பேசுகிறேன.

"என்னுடைய மூன்றாவது திருக் குமாரன் ரேணுவுக்கே என் சொத்துக்கள் உரிமையாகட்டும்.

"நான் இறக்கும்போது என் அருகிருந்து உச்சி மோந்து, முத்தம் கொடுத்து வழியனுப்ப என் உள்ளம் கவர்ந்த காதலர் அருகிலில்லை. அப்படியிருக்கவும் முடியாது. சமூகம் அவ்வளவு துணிகரமான ஒழுக்கக்கேட்டை அனுமதிக்காது என்பது தெரியும்! இருந்தாலும் இந்த உலகத்தையே விட்டுப் பிரியப் போகும் அந்தப் பெரும் பிரிவின்போது அவர் அருகிலில்லை என்பது எனக்குப் பெருங் குறைதான். என்னுடைய காதலரும் அவரது மகனும் துணையில்லாத உலகில் ஒருவர்க்கொருவர் துணையாக நின்று நேசித்து வாழ்ந்திருக்க வேண்டும் என்பது என் கடைசி அவா."

என்னுடைய தந்தையை நோக்கி நான் ஓடினேன். அவர் என்னை மார்போடு தழுவிக் கொண்டார். நான் தேம்பித் தேம்பி அழுதேன். அவர் என்னை அழைத்துக் கொண்டு வெளியேறினர். என் அண்ணன்மாரும் அவர்களது தந்தையும் வாயில் வந்தபடி வைது கொண்டிருந்தனர். இது "பைத்தியக்காரியின் உயில்"! என்றெல்லாம் கத்திக் கொண்டிருந்தனர். என் தந்தை அவற்றைப் பொருட்படுத்தாமல் நடந்துகொண் டிருந்தார்.

என் தாயோடு கொண்டிருந்த தொடர்பைப்பற்றி என் தந்தை எப்பொழுதாவது சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன. நடந்ததென்னவோ மேலும் மேலும் சோகமாகவே இருந்தது. இரண்டு நாள்தான் சென்றன, என் தந்தையைச் சதி செய்து சுட்டுவிட்டார்கள்...

இதைச் சொல்லிவிட்டு அவன் கண்ணீர் வடித்தான். "அழாதே" என்றேன்.

"நான் தனிமனிதன்" என்றான்.

"தனி மனிதனாக இந்த உலகத்தில் வாழ்வதில்தான் துன்பமில்லை" என்றேன் நான்.

"என் தாய் வாழ்ந்த சிற்றூரை விட்டுவிட்டு நான் இந்த நகரத்திற்கு வந்து விட்டேன். நகரத்தில் இருப்பதால்தான் நான் மனங் கோணாமல் தலை நிமிர்ந்து பழக முடிகிறது" என்றான்.

[பிரஞ்சுக் கதையின் தழுவல்]

'மர்மயோகி'

தடபுடலான விளம்பரங்களுக்கிடையில் மர்மயோகி இம்மாதம் இரண்டாம் தேதியிலிருந்து பவனி வந்துள்ளார். பொழுது போக்கு நண்பர்கள் முட்டியடித்து முதல் வகுப்பு டிக்கட்டாவது எடுத்துக் கொண்டு இந்நேரம் யோகியாரைப் பார்த்திருப்பார்கள் என்றே நம்புகிறோம். எதிர்பார்த்துக் கிடந்த அளவுக்கு எதுவும் மோசமில்லாமல், வெற்றிகரமாகவே, ஜூபிடர் பிக்சர்சார் மர்மயோகியை வெளியிட்டிருக்கின்றனர்.

கதை 'ராபின்ஹூட்' என்ற ஆங்கிலக் கதையின் தழுவலாக இருக்குமாம் என்று பல சினிமாப் பத்திரிகைகள் செய்தி விமர்சனம் செய்திருந்தன. படத்தின் ஒரு சில காட்சிகள் தான் நமக்கு ராபின் ஹூட்டை நினைவுபடுத்துகின்றன. டைரக்டர் கொஞ்சம் சிரத்தை எடுத்திருந்தால் படம் பார்ப்பவர்களுக்கு இந்த எண்ணம் ஏற்படாதவாறு அக்காட்சிகளை எடுத்திருக்கலாம். உண்மையில் மர்மயோகிக் கதைக்கும் ராபின் ஹூட் கதைக்கும் கொஞ்சங்கூடச் சம்பந்தமில்லை.

ஒரு அரசியல் சூதாடி—அவன் பெயர் பைசாச்சி—அரியாசனத்தைக் கைப்பற்ற நாடோடிப் பெண் ஒருத்தியை வசப்படுத்துகிறான். அந்த நாடோடிப் பெண்ணோ அவனைவிடப் பொல்லாதவளாயிருக்கிறாள். மன்னனைக் கொன்ற மறுநாளே, பைசாச்சியையும் தீர்த்துவிட்டுத் தானே ஏகபோக ராணியாகிவிடுகிறாள். ராணி ஊர்வசியின் ஆட்சியில் ஊர்மக்கள் கொதிப்படைகிறார்கள்.

ராணிக்கு ஆலோசகராக ஒரு திடீர் யோகி வருகிறார். அந்த யோகியைச் சுற்றிப் பல மர்மங்கள் சுழல்கின்றன.

காட்டிலே கரிகாலன் என்றொரு வீரன்! அவனும் அவனது கூட்டத்தாரும் ராணியின் ஆட்சியைக் கடுமையாக எதிர்க்கின்றனர். கரிகாலனுக்குத் 'தேவியின் கட்டளை' அவ்வப்போது அரண்மனைச் செய்திகளை அறிவிக்கின்றது. கரிகாலனின் கூட்டத்திற்கே இந்தத் 'தேவியின் கட்டளை' புரியாத விடுகதையாக இருக்கிறது.

தளபதி வீராங்கன் கரிகாலனை எவ்விதத்திலும் பிடித்து விடுவதென்று கங்கணம் கட்டுகிறான். எத்தனையோ தோல்விகள் அவனுக்கு! அவனுடைய அருமைத் தங்கை கலாவதி கூடக் கரிகாலனைப் பிடிக்கப்போய் அவனது காதலியாக மாறிவிடுகிறாள்.

கடைசியில், கொல்லப்பட்ட மன்னர் கொலைக்களத்தில் உயிரோடு தோன்றுகிறார்! அப்போது யோகியைப் பற்றிய மர்மங்களும், கரிகாலன், வீராங்கன், கலாவதி ஆகியோரைப்பற்றிய விவரங்களும் வெளிச்ச

மாகின்றன. நாடோடி ராணி மடிகிறாள். மற்றவர்கள் மங்களம் பாடுகின்றனர்! விறுவிறுப்பும் வேகமும் சிக்கலான இந்தக் கதையைச் சிறந்ததாக்குகின்றன.

இக்கதையிலும் 'கடமை கடமை' என்று சாகும் ஒரு 'ஜாவர்' வருகிறான். அவன் தான் வீராங்கன். மர்மயோகியின் மகன்: கடமைக்காரகத் தன் உடன் பிறந்த தங்கையையும்—ஏன், தந்தையையும்கூடக் கைது செய்து விடுகிறான். இப்பாகத்தை ஏற்று நடிக்கும் எஸ். வி. சகஸ்ரநாமம் சுமாராக நடித்திருக்கிறார்.

இப்படத்தில் வரும் நாடோடிப் பெண் ஊர்வசி ஒரு கொடுமைக் களஞ்சியம்; கொலைக்கஞ்சாத பழிகாரி; இத்தகைய முரட்டுப் பாத்திரத்திற்கு அஞ்சலிதேவி பொருத்தமானவராகத் தெரியவில்லை. இருப்பினும் அவரது நடிப்பைக் குறை சொல்ல முடியாது. சதிகார ராணியின் மன அமைதியைக் குலைப்பதற்கென்றே மர்மப்பேய் ஒன்று வருகிறது. பேயைக் கண்டு அஞ்சும் கட்டங்களிலெல்லாம் 'அருமை! அருமை!!' என்று சொல்லும்படியாக நடித்திருக்கிறார் அஞ்சலிதேவி. ஒரு சில இடங்களில் அவர் செய்யும் அங்க—அசைவுச் சேட்டைகளைக் குறைத்திருக்கலாம். மற்றும் கரிகாலனாக வரும் எம். ஜி. ராமச்சந்திரன், மர்மயோகி ராமா, நம்பியார், நடராஜன் முதலியோர் தத்தம் பாகங்களைச் செவ்வனே முடித்துள்ளனர்.

பாடல்களைக் காதுகொடுத்துக் கேட்கலாம்; 'மனதுக்கிசைந்த ராஜா' என்றபாட்டு மகிழ்ச்சியளிக்கிறது. கழுதை ஊர்வலமும் கழுதைப்பாட்டும் கனஜோர்.

குளுமையான இயற்கைக் காட்சிகள் சில படமாக்கப்பட்டிருக்கின்றன. அவை பார்க்கத் தகுந்தன.

அரண்மனை தர்பாருக்குள் நுழைந்து கரிகாலன் அட்டகாசம் செய்வது, கரிகாலன் கூட்டத்தை வீராங்கன் கைது செய்யும் காட்சி ஆகிய இடங்களில் டைரக்டர் ராம்நாத் மிகவும் பாடுபட்டிருக்கிறார்.

மர்மயோகி நல்லதொரு பொழுதுபோக்குப் படம்; ஜுபிடர் சோமு—மொய்தீனுக்கு இப்படம் நல்ல வசூலைக் குவிக்கும்என்பதில் சந்தேகமில்லை.

ஊர்வசியாக வரும் அஞ்சலிதேவி

நீங்கள் படித்தீர்களா ?

ஆர். வி.

எழுதிய

காதல் பசி

விலை 8 அணா

விபரங்களுக்கு

வெண்ணிலா வெளியீடு

118, பிராட்வே—சென்னை-1

உடனே தேவை

சினிமாவில் சேர்ந்து நடிக்க, ஆண் பெண் நடிகர்கள் உடனே தேவை.

விபரங்களுக்கு எழுதுக.

SHANTA FILM SERVICE

P. B. 9 — DELHI

குறிப்பு : கடிதங்களை ஆங்கிலத்தில் எழுதவும்

ஆதி சங்கீத புத்தகங்கள்

1. ஆதி சங்கீத ரத்னாவளி (ஏழாம் பதிப்பு)
   விலை ரூ. 5-0-0
2. ஆதி தியாகராஜஸ்வாமி கீர்த்தனைகள்
   விலை ரூ. 5-0-0
3. தமிழிசைப் பாடல்கள்
   இயற்றியவர் திருவொற்றியூர் ஜெகன்நாதம்
   விலை ரூ. 1-0-0
4. ஆதி சங்கீத சித்ராம்பரி
   விலை ரூ. 1-8-0

எம். ஆதி அண்டு கம்பெனி

சங்கீத புத்தக வியாபாரிகள்

11—286, சைனாபஜார், சென்னை

சாமிஸ் காபி

MFG. CO.,

262, சுபாஷ் சந்திரபோஸ் ரோட்

ஜி.டி. மதராஸ்.

வளரும் இலக்கியம்

வரப்பெற்றோம்.

திராவிடநாடு (பொங்கல்மலர்.)
அழகான மூந்நிற அட்டையோடு இவ்வாண்டுத் திராவிடநாடு பொங்கல்மலர் திகழ்கின்றது. அண்ணாவின் 'இருளில் ஒளி' 'புதிய பாதை' என்ற கட்டுரைகளுடன் தோழர்கள் தில்லை வில்லாளன், அரங்கண்ணல், கே. ஏ. மதியழகன் முதலியோரது எழுத்தோவியங்களும், மலரைச் சிறப்பிக்கின்றன. விலை அணா 8.

போர்வாள் (பொங்கல்மலர்).
கவியரசர் பாரதிதாசனாரின் பொங்கல் வாழ்த்துப் பாடல் மலருக்குச் சிறப்பைத் தருகிறது. மற்றும் அறிஞர் சி. என். அண்ணாதுரை, டாக்டர் மு. வ., மா. இளஞ்செழியன் முதலியோரது சிறந்த கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. விலை. அணா 8.

திராவிடன் (பொங்கல்மலர்)
கவியரசர் பாரதிதாசனாரின் கம்பீரமான உருவத்தை முகப்புப் படமாகக் கொண்டு வெளிவந்துள்ளது. கவிஞரின் 'அவர் வருவாரன்றோ?' என்ற பாடல் படிக்க இனிக்கின்றது. வழக்கம் போல இயக்க நண்பர்கள் மலரை அணி செய்துள்ளனர். விலை ஒரு ரூபாய்.

மகிழ்ச்சி (பொங்கல்மலர்
எளிய முறையில், எட்டணா விலையில் வெளி வந்திருக்கும் மகிழ்ச்சி பொங்கல் மலர் 'மகிழ்ச்சி' யளிக்கின்றது. சினிமா நட்சத்திரங்களின் ஸ்டில் போட்டோக்கள் சில சிறந்த முறையில் வெளியிடப் பட்டிருக்கின்றன. மற்றும் கி. ஆ. பெ. விசுவநாதம், நா. சதானந்தம், ஆசைத்தம்பி, வழிப்போக்கன் முதலியோரது கதை, கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. விலை அணா 8.

கலைக்கதிர் (பொங்கல் மலர்
பொங்கல்நாளில்புதுஞாயிற்றை வணங்கி வரவேற்கும் காட்சி தீட்டப் பெற்ற மூந்நிற ஆர்ட் அட்டையோடு விளங்குகிறது. நல்லதொரு விஞ்ஞான விருந்து. இடையிடையே நல்ல இயற்கைக் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. பொங்கலன்று நினைக்க வேண்டிய காட்சி, நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது விலை ரூ 2-8-0.

பேசும் படம் (பொங்கல்மலர்)
சினிமா நடிகையரின் கலர் ஆல்பங்கள் கண்களைக் கவர்கின்றன. வெளிவரப்போகும் சில படங்களின் சித்திரக் காட்சிகள் மலரின் சிறந்த அம்சம். "பிரம்மம்" எழுதிய 'சிலந்திப் பெண்' என்ற சிறுகதையும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூ 1-8-0

சூறாவளி (பொங்கல்மலர்)
விலை 4 அணா. தமிழர் பாசறை குனியமுத்தூர்-கோவை.

முன்னேற்றம் (பொங்கல்மலர்)
விலை 20 சதம். இந்தியாவில் 3 அணா. கிடைக்குமிடம் "முன்

னேற்றம்" தபால் பெட்டி 1049, கொழும்பு.

பகுத்தறிவு

தோழர் ப. கண்ணன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு, பொங்கற் புதுநாளன்று 'பகுத்தறிவு' சுடர் விடுகின்றது. இங்கர்சாலின் சமுதாய விடுதலை என்ற கட்டுரையை இரா. நெடுஞ்செழியன் மொழிபெயர்த்துள்ளார். 'பகுத்தறிவு' தமிழகத்திற்கு நற்பணி புரியுமென்று நம்புகிறோம். தனிப்பிரதி விலை அணா 2.

முன்னேற்ற முரசு

தோழர் பி. ராமசாமியை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் திராவிடர் வார வெளியீடு. தனிப் பிரதி விலை 2 அணா. கிடைக்குமிடம் நிர்வாகி, முன்னேற்ற முரசு, 81 ஜி. ஏ. ரோடு, சென்னை 21.

குற்றவாளி யார்?

எழுதியது கலைப் பித்தன். வெளியிட்டோர் புதுமை மன்றம், கடைவீதி, சத்தியமங்கலம்.

திருக்குறள் (கருத்திதழ்)

குறட்பாக்களுக்குப் பரிமேலழகர், மணக்குடவர், டாக்டர் மு. வ, புலவர் குழந்தை ஆகியோரது உரைகளை வரிசையாகக் கூறிச் செல்லுகிறது. மாதம் ஒரு முறை. விலை 0-0-6 வள்ளுவர் பதிப்பகம், 236, கிலாரி ரோட், பெங்களூர் 2.

பயந்தாங்கொள்ளி (கு. அழகிரிசாமி எழுதியது)

மரணம்

மரணத்திற்குப்பின் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளும் வரையில், மனிதர்கள் மரணத்தைக் கண்டு அஞ்சிக்கொண்டுதான் இருப்பார்கள்.

—லியோ டால்ஸ்டாய்

முள்ளங்கித் திருடன்

(மணி எழுதியது)

சிறுவர் சிறுமியர்க்காக எழுதப்பட்ட கதைகள். விலை ஒவ்வொன்றும் 1 அணா. கிடைக்குமிடம் சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை 14.

கத்திக்கப்பல்

தோழர் மதிதாசன் எழுதியுள்ள சிறுசிறு கவிதை (!) கள் அடங்கிய சிறு புத்தகம். விலை அணா 2. அறிவுமலர்ப் பதிப்பகம் கோவிந்தகுடி P. O. கும்பகோணம்.

துப்பறியும் வீரன்

மு. தமிழரசு எழுதியுள்ள சிறுவர் கதை. விலை அணா 2. கிடைக்குமிடம் சொர்ணமுத்து நிலையம், தெம்மாப்பட்டு, திருப்பத்தூர்.

நல்ல பூனை விலை 0-0-6

ஜிலேபி விலை 0-0-3 கிடைக்குமிடம் தேவி நிலையம் மீளவிட்டான் - தூத்துக்குடி.

Printed by AR. Periyannan, at Senthamizh Pathippakam, Pudukkottai
Editor & Publisher: Murugu Subramanian

19779

போன்: 2549 தந்தி: "IMAGE"

எங்களிடம்

ஜன்னல் கண்ணாடிகள்

பலநிறக் கண்ணாடிகள்

முகம் பார்க்கும் கண்ணாடிகள்

மூன்றெட்டுப் பலகைகள்

படங்கள், சட்டங்கள்

மேசைக் கண்ணாடிகள்

முதலியன கிடைக்கின்றன

○

R. ETHIRAJIAH & SONS

103, *Devaraja Mudali Street, P. T., Madras-3.*

Wrapper printed at Shanti Press, Madras-1